கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# பகவத் தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை மே 2011 ₹ 15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்

**மலர் 3, இதழ் 4** **மே 2011**


## பகவத் தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே பகவத் தரிசனம்.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், மதுமதி பிரியா தேவி தாஸி, ராதா மதுராபதி தாஸ், ராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** கேசவன்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, மும்பை.

**பதிப்பகத்தார் அலுவலகம்:** ஹரே கிருஷ்ண நிலம், ஜுஹு சாலை, மும்பை - 400 049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.


**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக
அறக்கட்டளை


2 எல்லா சக்திகளின் ஆதாரம்

8 பகவத் கீதையா, கால்பந்தா?

9 படித்தவனுக்கும் பாமரனுக்கும் ஏற்ற பக்தி

12 பிரகலாதன், மிகச்சிறந்த பக்தனின் கதை

16 எனக்கு என் கண்கள் வேண்டும்!

17 தாங்கள் பயணம் செய்பவரா?

20 மதச்சார்பற்ற அரசு

22 பகவத் கீதை உண்மையுருவில், ஒரு கண்ணோட்டம்—பாகம் ஆறு

26 பிரபுபாதர் நூற்றந்தாதி

29 ஸ்ரீமத் பாகவதம்


## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# எல்லா சக்திகளின் ஆதாரம்

**நாம் அனைவரும் கடவுளின் சக்திகள் என்பதால், நாமும் கடவுள் என்று பொருள்படுமா?**

வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்
அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

**(1971ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ந் தேதி மும்பையில் ஆற்றிய உரை)**

பூமிர் ஆபோ 'னலோ வாயு:
கம் மனோ புத்திர் ஏவ ச
அஹங்கார இதீயம் மே
பின்னா ப்ரக்ருதிர் அஷ்டதா

அபரேயம் இதஸ் த்வன்யாம்
ப்ரக்ருதிம் வித்தி மே பராம்
ஜீவ-பூதாம் மஹா-பாஹோ
யயேதம் தார்யதே ஜகத்

"பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அஹங்காரம்—இந்த எட்டும் சேர்ந்ததே எனது பிரிந்த ஜட சக்திகளாகும். பலம் பொருந்திய புயங்களை உடைய அர்ஜுனா, இதற்கு அப்பால், என்னுடைய உயர்ந்த சக்தி ஒன்று உள்ளது. இந்த தாழ்ந்த ஜட இயற்கையினை தனது சுயநலனிற்காக உபயோகிக்கக்கூடிய ஜீவாத்மாக்களை அஃது உள்ளடக்கியதாகும்." (பகவத் கீதை 7.4-5)

## கிருஷ்ணரின் பிரிந்த சக்திகள்

எவ்வாறு தாமே எல்லாமாக இருக்கின்றார் என்பதை கிருஷ்ணர் இங்கு விளக்குகின்றார். பௌதிக விஞ்ஞானிகள், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஸ்தூலப் பொருள்களை ஆராய்ச்சி செய்கின்றனர். மனோவியல் வல்லுநர்களும் தத்துவ ஆராய்ச்சியாளர்களும், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய சூட்சும விஷயங்களை ஆராய்ச்சி செய்கின்றனர். "இந்த எட்டு பௌதிக மூலகங்களும் என்னுடைய பிரிந்த சக்திகள்," என்று கிருஷ்ணர் இங்கு கூறுகிறார்.

"பிரிந்த சக்தி" என்பதை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? நான் பேசுகிறேன்; இந்த ஒலிநாடாவில் என்னுடைய குரல் பதிவு செயயப்படுகின்றது. இந்த ஒலிநாடாவினை இயக்கும்போது நான் பேசுவதை நீங்கள் கேட்கலாம், ஆனால் அதில் வரும் பேச்சு நான் தற்போது பேசுவதிலிருந்து வேறுபட்டது. பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்படும் ஓசை என்னுடைய பிரிந்த சக்தியாகும்.

கிருஷ்ணரின் பிரிந்த சக்தியாக இருக்கும்போதிலும், இந்த பௌதிக உலகம் அவரது வழிகாட்டுதலின்படி செயல்படுகிறது. அது சுதந்திரமானதன்று. "கடவுள் என்று ஒருவர் இல்லை; இந்த பௌதிக இயற்கை அதன் செயல்களாலும் எதிர்விளைவுகளாலும் இயங்குகிறது," என்று பௌதிக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் அஃது உண்மையன்று, இந்த பௌதிக இயற்கை பரம புருஷரின் வழிகாட்டுதலைச் சார்ந்தே உள்ளது. கிருஷ்ணர் பகவத் கீதையில் (9.11), மயாத்யக்ஷேன ப்ரக்ருதி ஸூயதே ஸ சராசரம் என்று கூறுகிறார். இந்த ஜட




இயற்கை அவருடைய மேற்பார்வையின் கீழ் செயல்படுகிறது.

## ஜட சக்திக்குப் பின்னால் இருக்கும் ஆன்மீக சக்தி

ஜட சக்தியானது தனித்துச் செயல்படுகிறது என்னும் கருத்து நல்லறிவின் அடிப்படையில் அமைந்ததல்ல. இங்கு இயங்கும் மின்விசிறி தானாக இயங்குவதில்லை; இதனை இயக்க மின்சக்தி தேவைப்படுகிறது. மின் உற்பத்தி நிலையமும் அந்த நிலையத்தைக் கண்காணிக்க பொறியாளரும் தேவை. பொறியாளர் என்னும் உயிர்சக்தி இல்லாமல், ஜட இயற்கை தன்னிச்சையாக செயல்பட முடியாது. ஜட இயற்கை அவ்வாறு தனித்துச் செயல்படுவதை நாம் நமது அனுபவத்தில் என்றும் கண்டதில்லை.

பௌதிகச் சக்தி செயல்படுவதை நாம் காண்கிறோம்; ஆனால் அதற்குப் புறம்பே ஆன்மீக சக்தி இருப்பதால்தான் அது செயல்படுகின்றது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.



மின்சாரக் கூடத்திலிருந்து வரும் மின்சக்தியை பொறியியல வல்லுநர் கட்டுப்படுத்துவதைப் போலவே, உலகிலுள்ள அனைத்து சக்திகளும் கிருஷ்ணரிடமிருந்து தோன்றி கிருஷ்ணரால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இந்த பௌதிக பொருள்கள் தம்மிடம் இருந்து வருவதாக கிருஷ்ணர் கூறுகிறார். ஆனால் எல்லா பௌதிகத் தோற்றங்களும் ஒரே ஒரு நபரிடமிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. பிரம்மாண்டமான ஆகாயம், பலவித சக்திகளுடன் கூடிய எண்ணற்ற கிரஹங்கள்—இவையனைத்தும் ஒரு குறிப்பிட்ட நபரிடமிருந்து உற்பத்தி செய்யப்படுவது எவ்வாறு சாத்தியம்? இதை காரணமாகக் கொண்டு, அறிவில் குறைந்தவர்கள் பரம்பொருள் உருவமற்றது என்று எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் பரம்பொருள் ஒரு நபர். சிறிய ஆன்மீகப் பொறியில் இருந்து நமது உடல் எவ்வாறு வளர்ச்சியடைகின்றதோ, அதைப் போலவே, இந்தப் பிரபஞ்சமானது உயர்ந்த ஆத்மாவான கிருஷ்ணரிலிருந்து வளர்ச்சியடைகின்றது. வேத இலக்கியத்தில் (ஷ்வேதாஸ்வதர உபநிஷத் 5.9) அந்த ஆன்மீகப் பொறியின் அளவு பின்வருமாறு விளக்கப்படுகிறது:

*பாலாக்ர-ஷத-பாகஸ்ய*
*ஷததா கல்பிதஸ்ய ச*
*பாகோ ஜீவ: ஸ விக்ஞேய:*
*ஸ சானந்த்யாய கல்பதே*

ஒரு முடியின் நுனிப் பகுதியினை நூறு பகுதிகளாக்கி, அதில் ஒரு பகுதியை எடுத்து அதை மீண்டும் நூறு பகுதிகளாகப் பிரித்தால், அதுவே ஆத்மாவின் அளவாகும். அதாவது, முடியின் நுனிப் பகுதியில் பத்தாயிரத்தில் ஒரு பங்குதான் ஆத்மாவின் அளவாகும். அந்த சிறிய ஆத்மாவை வைத்தே உடல் வளர்ச்சியடைகின்றது.

இந்த சிறிய ஆன்மீகப் பொறியானது தந்தையின் விந்துவில் தஞ்சமடைய, அதனை தாயின் கருப்பையில் தந்தை வழங்குகிறார். சாதகமான சூழ்நிலை இருக்கும்பட்சத்தில் உடல் வளரத் தொடங்குகிறது. முதலில் அது ஒரு பட்டாணியின் அளவில் இருக்கின்றது. அதிலிருந்து உடல் வளர்ச்சியடைய, பலவித துவாரங்கள் தோன்றுகின்றன. கண்கள், காதுகள், வாய், மூக்கு,

பிறப்புறுப்பு, மலவாய் ஆகியவை உடலில் தோன்றும் ஒன்பது துவாரங்களாகும்.

சிறிய ஆன்மீகப் பொறியே உடலை உண்டாக்குகின்றது என்பதை யார் வேண்டுமானாலும் புரிந்துகொள்ளலாம். அதுபோலவே, இந்தப் பிரபஞ்சத்தின் ஆத்மாவான கிருஷ்ணரின் ஆன்மீக உடலிலிருந்து முழு பிரபஞ்சமும் வளர்ச்சி பெறுகின்றது.

## ஆத்மா உருவமுடையது

ஜடப் பொருளின் கலவை உயிருக்கான அறிகுறிகளை உண்டாக்குகின்றது என்பதே பௌத்தர்களின் கருத்து. ஆனால் பகவத் கீதையிலிருந்தும் இதர வேத இலக்கியங்களிலிருந்தும், ஆத்மாவிடமிருந்தே ஜடப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். புத்தரின் தத்துவத்தின்படி, இந்த உடல் ஜடப் பொருள்களின் கலவை; இந்த ஜடக் கலவையை தனித்தனியாகப் பிரித்துவிட்டால், நமக்கு துன்பமோ இன்பமோ இருக்காது. இது *சூன்யவாதக்* கொள்கை எனப்படுகிறது. ஆனால் நாம் *சூன்யவாதிகள்* அல்ல; இறுதியில் அனைத்துமே உருவமற்ற நிலையிலேயே உள்ளன என்று நினைக்கும் *நிர்-விசேஷவாதிகளும்* அல்ல. நாம் *ஸ-விசேஷவாதிகள்*, ஆத்மா உருவமுடையது என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம்.

எவ்வாறு ஒரு நபர் தன்னுடைய பழைய ஆடைகளைக் கைவிட்டு புதிய ஆடைகளை எற்றுக் கொள்கின்றாறோ, அதே போன்று நாம் நம்முடைய உடலை மாற்றிக் கொண்டே வருகின்றோம். நம்முடைய ஆன்மீக உடலுக்கு கை கால்களுடன் ஓர் உருவம் இருப்பதால், அதே போன்ற உருவம் கொண்ட ஒரு பௌதிக உடலை நாம் விருத்தி செய்கின்றோம். இதை மிகவும் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். உங்களுடைய கோட், சட்டை, கால்சட்டை ஆகியவற்றிற்கு கைகளும் கால்களும் உள்ளன; ஏனெனில், உங்களுக்கு கை கால்கள் உள்ளன. உடையைப் போன்று கருதப்படும் இந்த பௌதிக உடல், ஆன்மீக உருவத்தின் மீது வளர்ச்சியடைகின்றது. இதைப் புரிந்துகொள்ளும் உணர்வை *ஸ-விசேஷவாதம்* என்று அழைக்கின்றோம்.

## சூட்சும உடல்

இந்த ஸ்லோகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள எட்டுப் பொருள்களை உள்ளடக்கியதே பகவானின் புற அம்சமாகும். அந்த எட்டில், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய மூன்றும் சூட்சுமமானவை. சூட்சுமமானவை என்றபோதிலும், இவை ஜடப் பொருள்களே. சூட்சுமமாக உள்ளபோதிலும், மனம் ஒரு பௌதிக வஸ்துவாக இருப்பதால், மனக் கற்பனை, மனதால் உணர்தல் போன்றவற்றை ஆன்மீக பயிற்சிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது.

சூட்சும உடலின் செயல்பாட்டினை இரவு நேரத்தில் நாம் உணரலாம். நமது வெளிப்புற உடலிலிருந்து பிரிந்த ஓர் உடல் இருப்பதைநாம்உணர்கிறோம். நாம்நமது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தாலும், அவ்வுடல் நமது அறையிலிருந்து வெகு தொலைவிற்கு சென்றுள்ளது என்று நாம் எண்ணுகிறோம். இச்சமயத்தில்வெளிப்புற உடலை நாம் மறந்து விடுகின்றோம். அதுபோலவே, இறக்கும் தருவாயில் நமது உணர்வை அடிப்படையாக வைத்து, நமது மனமும் புத்தியும், இறந்த பிறகு நம்மை வேறொரு உடலுக்கு எடுத்துச் செல்கின்றன; அப்போது தற்போதைய உடலை நாம் மறந்து விடுகிறோம்.

“நான் பௌதிக சக்தியைச் சார்ந்தவன்,” என்ற எண்ணத்தை அஹங்காரம் நமக்கு வழங்குகின்றது. ஆனால்உண்மையில்நாம்அனைவரும், *ப்ரஹ்மன்*, ஆன்மீக ஆத்மாக்கள். *அஹம் ப்ரஹ்மாஸ்மி*. ஆன்மீக ஆத்மாவானது உன்னத ஆத்மாவான கிருஷ்ணரின் ஒரு பகுதி; மேலும், ஜடம், ஆன்மீகம் ஆகிய அனைத்திற்கும் கிருஷ்ணரே மூலம், *ஜன்மாத்யஸ்ய யத:.*

## உயர்ந்த சக்தியான உயிர்வாழிகள்

கிருஷ்ணர் பற்பல சக்திகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளார், *பராஸ்ய ஷக்திர் விவிதைவ ஷ்ரூயதே*. இந்த பௌதிக சக்தியானது அத்தகு சக்திகளில் ஒன்றாகும். இது வெளிப்புற சக்தி என்று அழைக்கப்படுகின்றது. என்னுடைய உடல் எவ்வாறு எனது வெளிப்புற சக்தியோ, அதுபோல இந்த முழுப் பிரபஞ்சமுமே கிருஷ்ணரின் வெளிப்புற சக்தியின் தோற்றமாகும்.

பௌதிக மூலகங்களைப் பட்டியலிட்ட பிறகு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், “இந்த பௌதிக மூலகங்கள் எனது தாழ்ந்த சக்திகள்,” என்று கூறுகிறார், *அபரா* என்றால் தாழ்ந்த நிலையில் உள்ளவை என்று பொருள். நாம் இவ்வுலகிலுள்ள விஷயங்களை எவ்வாறு உயர்ந்தது தாழ்ந்தது என்று ஒப்பிடுகின்றோமோ, அதுபோலவே கிருஷ்ணரும் தமது சக்திகளைதானேபாகுபடுத்திப்பார்க்கிறார். எட்டு சக்திகளை தாழ்ந்த சக்திகள் என்றும், மற்றொரு உயர்ந்த சக்தி உள்ளது என்றும் கூறுகிறார். அந்த உயர்ந்த சக்தியானது, *ஜீவ பூத* (உயிர்வாழிகள்) என்று அழைக்கப்படுகின்றது.

## நாமும் கடவுளா?

நாம் கிருஷ்ணரின் சக்திகள். ஆனால் மாயாவாதக் கொள்கையோ பரம்பொருளும் நாமும் ஒன்றே என்று பறைசாற்றுகின்றது; இருப்பினும், பகவத் கீதையானது நாம் வெறும் சக்திகளே என்றும், கிருஷ்ணரே சக்திமான் என்றும் விளக்குகின்றது.

சக்திக்கும் சக்திமானுக்கும் வேறுபாடு உண்டு. சூரியனையும் சூரிய வெளிச்சத்தையும் எடுத்துக் கொள்வோம். சூரிய வெளிச்சமானது சூரியனின் ஒரு சக்தியாகும். உங்களுடைய அறையில் சூரிய ஒளி வந்துவிட்டது என்றால், சூரியனே அங்கு வந்துவிட்டது என்று அர்த்தமல்ல. சக்தியும் சக்திமானும் ஒரே நேரத்தில் ஒன்றுபட்டும் வேறுபட்டும் உள்ளனர். இதுவே பகவான் சைதன்யரின் தத்துவம், *அசிந்த்ய பேதாபேத தத்துவம்*. பல தத்துவவாதிகள் கடவுளும் உயிர்வாழிகளும் ஒன்றே என்றும், உயிர்வாழி மாயையால் கவரப்பட்டிருப்பதால் இதைப் புரிந்துகொள்ள தவறுகிறான் என்றும்

**உயிர்வாழிகள் மாயையால் கவரப்பட்டுள்ளனர், ஆனால் கடவுள் மாயையால் கவரப்பட மாட்டார், அது சாத்தியமல்ல. மேகத்தினால் சூரியனை எனது பார்வையிலிருந்து மறைக்க முடியும்; ஆனால் ஒருபோதும் சூரியனை மறைக்க முடியாது.**

வாதிடுகின்றனர். உயிர்வாழிகள் மாயையால் கவரப்பட்டுள்ளது உண்மையே, ஆனால் கடவுள் மாயையால் கவரப்பட மாட்டார், அது சாத்தியமல்ல. மேகத்தினால் சூரியனை எனது பார்வையிலிருந்து மறைக்க முடியும்; ஆனால் அந்த மேகத்தினால் ஒருபோதும் சூரியனை மறைக்க முடியாது. எனவே, உயிர்வாழி எவ்வாறு கடவுளாகக் கருதப்பட முடியும்? மாயை என்பது கடவுளின் ஒரு சக்தியாகும்.

## கடவுளை மாயை மறைக்க முடியுமா?

விஷ்ணு-ஷக்தி: பரா ப்ரோக்தா
க்ஷேத்ர-க்ஞாக்யா ததா பரா
அவித்யா-கர்ம-ஸம்க்ஞான்யா
த்ரிதீயா ஷக்திர் ஈஷ்யதே

(விஷ்ணு புராணம் 6.7.61)

கிருஷ்ணருடைய பலதரப்பட்ட சக்திகள் அனைத்தும் ஆன்மீகமானவை. கிருஷ்ணர் முற்றிலும் ஆன்மீகமானவர் என்றால் அவருடைய சக்திகளும் ஆன்மீகமாகவே இருக்க வேண்டும். எனவே விஷ்ணு புராணம் கூறுகிறது: விஷ்ணு-ஷக்தி பரா ப்ரோக்தா, "ஆதியில் கடவுளின் சக்திகள் அனைத்தும் ஆன்மீகமானவை." பரா என்றால் "ஆன்மீகமானது" என்று பொருள். க்ஷேத்ர-க்ஞ சக்தி, அல்லது ஜீவ சக்தி என்று அழைக்கப்படும் உயிர்வாழிகளும் பரா சக்திகளாவர், அதாவது ஆன்மீக சக்திகள். அவித்யா-கர்ம-ஸம்க்ஞான்யா த்ரிதீயா ஷக்திர் ஈஷ்யதே. ஆனால் அவித்யா, அறியாமை எனப்படும் இன்னொரு சக்தி உள்ளது. அந்த சக்தி ஆதியில் ஆன்மீகமாக இருந்தாலும், தற்போது அறியாமையாகச் செயல்படுகிறது.

பிரஹ்மன் அல்லது கடவுள் மாயையினால் மறைக்கப்பட்டிருக்கிறார் என்று கருதுவதும் ஒருவிதமான அறியாமையே. மிகப் பெரியவர் என்று பொருள்படும் பிரஹ்மன், எவ்வாறு மாயையினால் மறைக்கப்பட முடியும்? அஃது உண்மையானால், மாயா சக்தியே மிகப்பெரியதாக இருக்க வேண்டும்; பிரஹ்மன் அல்ல. மாயையினால் பிரஹ்மனை மறைக்க முடிந்தால், மாயையானது பிரஹ்மனைவிடப் பெரியதாகிவிடும். ஆனால் அது சாத்தியமல்ல. மேகம் எவ்வாறு சூரியனின் சக்தியாக உள்ளதோ, அதுபோல மாயை பிரஹ்மனின் சக்தியாகும். சூரிய வெப்பத்தின் காரணமாக கடல் நீர் ஆவியாக்கப்பட்டு மேகங்களாக உருமாற்றம் அடைகின்றது. எனவே, மேகமானது சூரியனின் மாற்றமடைந்த சக்தியே தவிர வேறில்லை; அதுபோலவே மாயா சக்தியானது கிருஷ்ணரின் ஒரு சக்தியே.

எனவே, கிருஷ்ணர் மாயையைக் கட்டுப்படுத்துகிறார்; மாயை ஒருபோதும் கிருஷ்ணரைக் கட்டுப்படுத்த முடியாது. மாயை கிருஷ்ணரைக் கட்டுப்படுத்துகிறது என்பது நல்ல வாதம் அல்ல; அதுபோன்ற சிந்தனைகள் அறிவுப் பற்றாக்குறையினால் எழுகின்றன; கிருஷ்ணரை எவரும் மறைக்க முடியாது.

வேதங்களைத் தொகுத்தவரான ஸ்ரீல வியாசதேவர், பக்தி யோக தியானத்தின் மூலம் கிருஷ்ணரையும் மாயையையும் கண்ணுற்றபோது, மாயை கிருஷ்ணரின் நிழலைப் போன்று அவருக்குப் பின்னால் இருந்தது. மாயையினால் கிருஷ்ணரை மறைக்க முடியாது. அஃது ஒரு தவறான கொள்கையாகும். மாயையினால் தனி ஆத்மாவை மட்டுமே மறைக்க முடியும்.

## மாயையின் பிடியில் ஜீவன்கள்

தனி ஆத்மாவிடம் மாயையின் பிடியில் இழிவதற்கான தன்மை இருப்பதால், அது தடஸ்த ஷக்தி, நடுநிலை சக்தி எனப்படுகிறது. சில சமயங்களில் உலர்ந்தும் சில சமயங்களில் நீரால் சூழப்பட்டும் இருக்கும் கடற்கரையைப் போன்றது ஆத்மாவின் நிலை என்று கூறலாம். நாம் மாயையினால் மறைக்கப்படும்போது, அது ஜீவ-பூத நிலை எனப்படுகிறது. மாயையினால் மறைக்கப்படாமல் இருந்தால், அது ப்ரஹ்ம-பூத நிலை எனப்படுகிறது. நாம் கிருஷ்ண உணர்வுடன் இருத்தல், ப்ரஹ்ம-பூத நிலை என்றும், கிருஷ்ண உணர்வின்றி இருத்தல், அதாவது பௌதிக உணர்வில் இருத்தல், மாயையினால் கவரப்பட்ட நிலை என்றும் அறிய வேண்டும். மாயையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன், நாம் பெருமகிழ்ச்சியை அடைவோம்; நோயினால் பாதிக்கப்பட்டவன் அதிலிருந்து விடுபட்டு பெருமகிழ்ச்சியை அடைவதைப் போல!

## போர் வீரனாகச் செயல்பட வேண்டும்

அர்ஜுனன் இங்கு மஹா-பாஹோ, சிறந்த போர் வீரன் என்று அழைக்கப்படுகிறான். அர்ஜுனனைப் போன்ற சிறந்த போர் வீரனால் இவ்விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியும் என்று கிருஷ்ணர் கூறுகிறார். யார் அந்த போர் வீரன்? கிருஷ்ணரின் வழிகாட்டுதலின்படி சண்டையிடுபவனே அந்த போர் வீரன்.

அதன்படி, கிருஷ்ண உணர்வைப் பிரச்சாரம் செய்பவர்களும் போர் வீரர்களே. கிருஷ்ண உணர்வற்ற நபர்களோடு அவர்கள் போரிடுகின்றனர். அவ்வாறு போரிட்டு இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தைப் பரப்புகின்றனர். இருப்பினும், இந்தப் போர் அர்ஜுனனின் போரிலிருந்து வேறுபட்டதாகும். பகவான் சைதன்ய மஹாபிரபு இதனை நமக்குக் கற்பித்துள்ளார். க்ருஷ்ண-வர்ணம் த்விஷாக்ருஷ்ணம் ஸாங்கோபாங்காஸ்த்ர-பார்ஷதம். அஸ்த்ர என்றால் ஆயுதம். சைதன்ய மஹாபிரபு இயந்திரத் துப்பாக்கியை வைத்து மாயையுடன் போரிடவில்லை; மாறாக அவரது நம்பிக்கைக்குரிய சகாக்களான நித்யானந்த பிரபு, ஸ்ரீ அத்வைதர், கதாதரர், ஸ்ரீவாஸ தாகூர் ஆகியோரின் துணையுடன் போரிட்டார். அவர் போரிட பயன்படுத்திய ஆயுதங்கள் அவரது பக்தர்களே.



இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் மாயைக்கு எதிராகத் தொடுக்கப்படும் பகிரங்கமான போர். இந்த போர், ஹரே கிருஷ்ண மஹாமந்திர கீர்த்தனத்தின் மூலம் நடத்தப்படுகின்றது.

எனவே, ஸ்ரீசைதன்யரின் இயக்கமும் ஒருவிதப் போர்தான். கிருஷ்ண பக்தி இயக்கத்தின் எல்லா பக்தர்களும், எல்லா பிரச்சாரகர்களும், மஹா-பாஹோ, கிருஷ்ணர் என்னும் ஆயுதத்தால் அதிக பலம் பெற்ற போராளிகளாவர். அவர்களைத் தோற்கடிக்க முடியாது. மாயையுடனான போராட்டத்தை அவர்கள் தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்துவார்கள்.

மாயை என்பது யாது? பௌதிக வசதிகளின் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று ஓர் உயிர்வாழி நினைக்கும்போது அவன் மாயையில் இருப்பதாகப் பொருள்படும். இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் மாயைக்கு எதிராகத் தொடுக்கப்படும் பகிரங்கமான போர். இந்த போர், ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்ற கீர்த்தனத்தின் மூலம் நடத்தப்படுகின்றது. இதன் உன்னதமான ஒலியதிர்வுகள் உலகின் சூழ்நிலையை தூய்மைப் படுத்துகின்றன, கிருஷ்ண பக்தி இயக்கத்தின் போர் வீரர்கள் வெற்றியுடன் வந்தால், முழு உலகமும் அமைதியடையும்.

## நாம் அனுபவிப்பாளர்கள் அல்ல

எனவே, உயிர்வாழிகள் கிருஷ்ணருடைய சக்தியின் பகுதிகளாவர், அவர்கள் ப்ரக்ருதி என்று அழைக்கப்படுகின்றனர். புருஷர், ப்ரக்ருதி என்பதற்கு ஒரு பக்குவமற்ற உதாரணமாக ஆணையும் பெண்ணையும் எடுத்துக் கொள்ளலாம். ஆண் என்பவன் அனுபவிப்பவன் என்றும், பெண் என்பவள் அனுபவிக்கப்படுபவள் என்றும் அறிகின்றோம். அதுபோலவே ப்ரக்ருதி எனப்படும் உயிர்வாழி, அனுபவிப்பவன் அல்ல, அனுபவிக்கப்பட வேண்டியவன். அதுவே நமது இயல்பான நிலையாகும். செயற்கையான முறையில் அனுபவிப்பவனாக மாற நாம் முயற்சித்தால், நம்மால் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.

மனு ஸம்ஹிதை என்னும் வேத இலக்கியத்தின்படி, பெண் ஒருபோதும் தனித்துச் செயல்படக் கூடாது. அவள் எப்போதும் யாரையாவது சார்ந்தே இருக்க வேண்டும், அதுவே அவளுக்கு உண்மையான மகிழ்ச்சியை நல்கும். சிறுவயதில் தகப்பனாரின் பாதுகாப்பிலும், பின்னர் கணவனின் பாதுகாப்பிலும், இறுதியில் வளர்ந்த மகன்களின் பாதுகாப்பிலும் அவள் இருக்க வேண்டும். இதுவே மனுவின் நீதி சாஸ்திரங்கள் நமக்களிக்கும் வழிகாட்டுதல்களாகும்.

உண்மையில் பெண்ணானவள், பொருத்தமான தந்தை, கணவன் அல்லது மகனைச் சார்ந்திருந்தால், மகிழ்ச்சியாக இருப்பாள். எனவே, நம்முடைய வேதக் கலாச்சாரத்தில், ஒரு பெண் இளமையாக இருக்கும்போது, அவளைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கான பொருத்தமான பையனைக் கண்டுபிடிப்பது தகப்பனாரின் கடமையாகும். அவ்வாறு ஒரு பொருத்தமான கணவனை கண்டுபிடித்துவிட்டால், அவருக்கு பொறுப்பிலிருந்து விடுதலை கிடைக்கிறது. "நான் எனது மகளை பொருத்தமான பையனிடம் ஒப்படைத்துவிட்டேன்," என்று அவர் மகிழ்ச்சியாக இருப்பார்.

உயிர்வாழிகளை ப்ரக்ருதி, அனுபவிக்கப்படுபவர்கள் என்று கிருஷ்ணர் கூறுகிறார். அவர்கள், புருஷர்கள், அனுபவிப்பவர்கள் அல்ல. ப்ரக்ருதி எவ்வாறு இந்த ஜடவுலகத்தை அனுபவிப்பவராக இருக்க முடியும்? அது சாத்தியமல்ல, செயற்கையானது. எனவே, நம்முடைய முக்கியமான வியாதி யாதெனில், நாம் கிருஷ்ணரால் அனுபவிக்கப்படுபவர்களாக இருந்தும், தனியாக அனுபவிக்க விருப்பப்படுகிறோம். நாம் கிருஷ்ணரின்

ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள், ஆனால் ஆதிக்கம் செலுத்துபவர்களாக மாற முயற்சிக்கின்றோம். இதுவே நம்முடைய குறைபாடு, கிருஷ்ணரின் ஆதிக்கத்தில் இருக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

மீண்டும் பெண்ணின் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நல்ல தந்தை, அருமையான கணவர், அருமையான (வளர்ந்த) மகன்—இவர்களின் கட்டுப்பாட்டில் வந்தவுடன், அவள் மிகவும் மகிழ்ச்சியடைகிறாள். அவள்தனித்துசுயேச்சையாகச்செயல்படத் தொடங்கினால்... ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பல்வேறு பெண்கள் தங்களை சுதந்திரமானவர்கள் என்று அறிவித்து, பின்னர் எந்த சந்தோஷமும் இன்றி இருப்பதை நான் நடைமுறையில் கண்டுள்ளேன். வயதான காலத்தில் அவர்கள் மிகவும் வருத்தத்துடன் காணப்படுகின்றனர். இளவயதிலும்கூட அவர்களுக்கு நல்ல கணவன் கிடைக்காததால், மிகவும் துயரத்துடன் வாழ்கின்றனர்.

நாம் ப்ரக்ருதி என்பதால், உயர்ந்த கணவரை அல்லது தந்தையைச் சார்ந்தே நாம் வாழ வேண்டும். நீங்கள் கிருஷ்ணரை உங்களுடைய தந்தையாக ஏற்றுக் கொள்ளலாம். கிருஷ்ணரை உங்களுடைய தந்தையாகவோ, கணவராகவோ, எஜமானராகவோ கருதி அவரிடம் அன்பு செலுத்தலாம்.

ஜீவாத்மாக்களின் இந்த இயல்பான நிலையைப் பற்றி போதிப்பதற்காக கிருஷ்ணர் தோன்றினார். “நான் கடவுள், நானே கிருஷ்ணர், ஒவ்வொருவரும் கிருஷ்ணரே” என்று நினைத்து பெருமிதங் கொள்ளுதல் கூடாது. அதுவே மாயை எனப்படுகிறது. இத்தகு எண்ணம், நம்மை ஆட்கொள்வதற்கான மாயையின் கடைசிப் பொறியாகும். “மிகவும் பெரியவனாக, இவ்வுலகிலேயே மிகப்பெரிய பணக்காரனாக மாறு,” என்று மாயை நமக்கு உத்தரவிடுகிறது. அதன்படி பெரியவனாக, தலைவனாக மாற நாம் போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.



உண்மையில் கிருஷ்ணரைத் தவிர வேறு எவரும் தலைவர் அல்ல. கிருஷ்ணர் மட்டுமே தலைவர். அதுவே வேதங்களின் கட்டளை. கிருஷ்ணர், “நானே அனுபவிப்பானன்,” என்று கூறுகிறார். “உயிர்வாழிகளானநீங்களும் அனுபவிப்பவர்களே” என்று அவர் கூறவில்லை. “நீயும் அனுபவிப்பாளன், நானும் அனுபவிப்பாளன்” என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறவில்லை.

ப்ரக்ருதி என்னும் நமது நிலையை ஒப்புக் கொண்டு, கிருஷ்ணரைச் சார்ந்து நாம் வாழ வேண்டும். அப்போது அவர் நமக்குப் பொறுப்பேற்றுக் கொள்கின்றார். *ஸர்வ-பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி*, “எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் நான் உன்னை விடுவிக்கிறேன்,” (பகவத் கீதை 18.66) என்று அவர் நமக்குப் உறுதியளிக்கின்றார். *கௌந்தேய ப்ரதிஜானீஹி நமே பக்த ப்ரணஷ்யதி*, “என்னுடைய பக்தன் என்றும் அழிவதில்லை.” (பகவத் கீதை 9.31)

நாம் கிருஷ்ணரைச் சார்ந்தவர்கள் என்னும் இந்த தத்துவத்தை ஒப்புக் கொண்டால், புரிந்து கொண்டால், நமது வாழ்க்கை வெற்றியடையும். இல்லையேல் நாம் நமது வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொள்ள வாழ்க்கைப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டியதுதான்.

பிரம்மா முதல் முக்கியத்துவமற்ற சிறு எறும்புவரை இந்த பௌதிக உலகிலுள்ள ஒவ்வொரு உயிர்வாழியும் கிருஷ்ணரைப் போன்று அனுபவிப்பாளனாக மாறுவதற்கு கடுமையாகப் போராடுகின்றான். எனவே, இந்த கிருஷ்ண பக்தி இயக்கமானது மக்களை நிதான புத்தியுள்ளவர்களாக மாற்றுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. “நீங்கள் அனுபவிப்பவர்கள் அல்ல, கிருஷ்ணரே அனுபவிப்பவர். அவரால் அனுபவிக்கப்படுபவர்களாக மாறுங்கள். அதன் பின்னர் மகிழ்ச்சியாக இருக்கலாம்,” இதையே நாங்கள் போதித்து வருகிறோம். மிக்க நன்றி.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)

# பகவத் கீதையா, கால்பந்தா?

பகவத் கீதையைப் படிப்பதன் அவசியத்தை எடுத்துரைத்து ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தில் (பகவத் தரிசனத்தில்) அடிக்கடி கருத்துகள் வருவதைக் காண்கிறேன். ஆனால் பகவத் கீதையைப் படிப்பதைக் காட்டிலும் கால்பந்து விளையாடுதல் சிறந்தது என்றும், ஆன்மீக வளர்ச்சிக்கு அஃது உதவும் என்றும் சில சுவாமிகள் கூற நான் கேள்விப்பட்டுள்ளேன். அவ்வாறு கூறுவதற்கான காரணம் என்ன, அக்கூற்றில் ஏதேனும் உண்மை உள்ளதா? விளக்கம் தாருங்கள்.

--ஜெயசங்கர், நெய்வேலி

### எமது பதில்

கால்பந்து விளையாடுவதால் உடலை வேண்டுமானால் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம், ஆனால் ஆன்மீகத்தை உணர முடியாது. எவ்வளவுதான் உடலை ஆரோக்கியமாக வைத்தாலும், சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்களுக்கு இணையாக மனிதனால் பலம் பெற முடியுமா? நிச்சயமாக இல்லை. மனித வாழ்க்கை மிருகங்களுடன் போட்டியிடுவதற்காக அல்ல, ஆன்மீகப் பயிற்சி பெறுவதற்காகவே. ஆன்மீகம் என்பது ஆத்மாவிற்கும் உடலிற்கும் உள்ள வேறுபாட்டை அறிந்துகொள்வதில் தொடங்குகின்றது. அந்த வேறுபாட்டை கால்பந்து விளையாடுவதாலோ, கிரிக்கெட் விளையாடுவதாலோ எத்தனை யுகங்கள் கடந்தாலும் நம்மால் என்றுமே உணர இயலாது. கால்பந்து விளையாடுதல் பகவத் கீதையைப் படிப்பதைக் காட்டிலும் சிறந்தது என்னும் கருத்து முற்றிலும் தவறாக வழிநடத்தக்கூடியது, போலியானது, மற்றும் அசுரத்தனமானது. இதனை நாம் முற்றிலும் தவிர்த்தல் அவசியம்.

கணிதத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், கணிதப் பேராசிரியரிடமிருந்து கற்க வேண்டும்; மருத்துவத்தை அறிந்துகொள்ள நினைத்தால், மருத்துவப் பேராசிரியரை அணுக வேண்டும். யாராவது ஒருவர், “கால்பந்து விளையாடினால் போதும், எந்தப் பேராசிரியரையும் அணுக வேண்டாம்” என்று கூறினால், அஃது எந்த வகையில் நியாயம்? கால்பந்து விளையாடுவதால் மருத்துவ விஞ்ஞானத்தை புரிந்துகொள்ளலாம் என்று யாரேனும் கூறினால், மக்கள் அதை நம்புவார்களா? நிச்சயம் நம்ப மாட்டார்கள். ஆனால் ஆன்மீக விஞ்ஞானத்தை மட்டும் கால்பந்து விளையாடுவதால் கற்றுக் கொள்ளலாம் என்று சிலர் கூறும்போது, மக்கள் நம்புகின்றனர், ஏன்? அவர்கள் பொதுவாக ஆன்மீக அறிவின்றி அறியாமையில் இருப்பதால், “ஆன்மீகம்” என்ற பெயரில் யார் எதை உளறினாலும், அதை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக உள்ளனர். அதனால்தான், ஏமாற்றுவதற்கு எத்தனையோ நபர்கள் தினமும் முளைத்து வருகின்றனர். சற்று விவேகத்துடன் யோசிப்பவர்கள் இதனைப் புரிந்துகொள்ளலாம்.

இதுபோன்ற அபத்தமான கருத்துகளைச் சொல்பவர்கள் முறையான குரு சீடப் பரம்பரையில் வராதவர்கள், ஆன்மீக வாழ்வின் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காதவர்கள். அவர்கள் மாமிசம், புகைப் பழக்கம் போன்ற தீயச் செயல்களில் ஈடுபடுபவர்களாக இருப்பது நிச்சயம். ஆன்மீக விஷயங்களை ஒருவரிடமிருந்து கேட்பதற்கு முன், அவர் அதனை முறையான குரு சீடப் பரம்பரையிலிருந்து பெற்றவரா, தனது வாழ்வில் அவரும் அதைப் பின்பற்றுகின்றாரா, ஆன்மீகவாதிகளுக்கான கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கின்றாரா போன்றவற்றை கவனித்தல் அவசியம். பிரபலமானவர் என்பதால், அதிகாரமுடையவர் என்று எடுத்துக் கொள்ளுதல் உகந்ததன்று. அதிகாரமின்றி பகவத் கீதையைப் பற்றிப் பேசுதல் அயோக்கியத்தனமாகும்.

அதிகாரமற்ற யாரோ சில சுவாமிகள் கூறுவதற்கு நாம் ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? கிருஷ்ணர் கூறியதற்குத் தான் நாம் முக்கியத்துவம் (16ஆம் பக்கம் பார்க்க)

# படித்தவனுக்கும் பாமரனுக்கும் ஏற்ற

# பக்தி

வழங்கியவர்: திருமதி. கீத கோவிந்த தாஸி

பக்தி—யாரெல்லாம் இதில் ஈடுபடலாம்? என்னும் கேள்வி நம் எல்லோர் மனதிலும் எழக்கூடிய ஒன்றாகும். பக்தி என்று சொல்வதைவிட பக்தித் தொண்டு என்று உரைத்தல் சிறந்ததாகும். ஏனெனில், பக்தி என்பது பகவானுக்குச் செய்யும் தொண்டுகளைக் குறிக்கும். பகவானின் திருநாமத்தைப் பாடுதல், பகவத் கீதை, பாகவதம் போன்ற புத்தகங்களைப் படித்தல், அவற்றைக் கேட்டல், பகவானுடைய விக்ரஹத்திற்கு ஆரத்தி, நைவேத்தியம் போன்ற சேவைகளைச் செய்தல், பக்தர்களுக்குப் பணிவிடை செய்தல், பிரசாதம் விநியோகித்தல், கோவிலை சுத்தம் செய்தல், பக்தித் தொண்டை மற்றவர்களுக்கு எடுத்துரைத்தல், தீர்த்த யாத்திரை செல்லுதல், தன்னிடமிருக்கும் அனைத்தையும் பகவானுக்கு அர்ப்பணித்தல் போன்ற பல்வேறு செயல்கள் பக்தித் தொண்டு என்று அழைக்கப்படுகின்றன.

இச்செயல்களைச் செய்வதற்கென்று குறிப்பிட்ட தகுதிகள் ஏதும் தேவையில்லை. தத்தமது நிலையில் இருந்தபடி அனைவரும் பக்தித் தொண்டில் ஈடுபடலாம். பக்தித் தொண்டில் ஈடுபடுவதற்கு ஒருவர் படித்தவரா படிக்காதவரா, ஏழையா பணக்காரனா, உயர்ஜாதியா தாழ்ந்த ஜாதியா, இளைஞரா முதியவரா, கருப்பரா வெள்ளையரா, இந்தியரா வெளிநாட்டவரா போன்றவை கருத்தில் கொள்ளப்படுவதில்லை. முழுமுதற் கடவுளுக்கு பக்தித் தொண்டு செய்ய வேண்டும் என்ற விருப்பமே மிகவும் அவசியமாகும். அறிவு, திறமை, பொருள்கள் என நம்மிடம் என்ன உள்ளதோ, அவை அனைத்தையும் பக்தித் தொண்டில் உபயோகிக்க முடியும்.




பல்வேறு விஞ்ஞானிகளின் மத்தியில்
தவத்திரு. பக்தி ஸ்வரூப தாமோதர ஸ்வாமி (இடது)

## படித்தவனின் பக்தி

ஒருவர் பல்வேறு மேற்படிப்புகளைப் படித்து விஞ்ஞானியாக இருக்கிறார் என்றால், அவர் தனது கல்வியைக் கொண்டு உலகத்தினருக்கு விஞ்ஞான ரீதியாக பக்தி மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்கலாம். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் பல்வேறு விஞ்ஞானிகள் அத்தகு சேவையை செய்து வருகிறார்கள். உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி T.D. சிங் (தவத்திரு. பக்திஸ்வரூப தாமோதர ஸ்வாமி) அவர்கள் இப்பணியில் சிறப்பாக ஈடுபட்டதை பலரும் அறிவர். கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் பக்தர்கள், அங்கிருக்கும் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பக்தித் தொண்டினை பிரச்சாரம் செய்து வருகின்றனர். இவ்வாறாக, பொறியாளர்கள், கணித வல்லுநர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், இராணுவத்தினர் என பல தரப்பைச் சேர்ந்தவர்களும் தங்களது நிறுவனங்களில் நடைபெறும் மாநாடுகளில் சொற்பொழிவு ஆற்றியும், புத்தகங்களை வெளியிட்டும் பக்தித் தொண்டு புரிகின்றனர்.

## பாமரனின் பக்தி

இவற்றைப் பார்க்கும் பாமரன், நான் என்ன செய்வது என்ற தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளக் கூடாது. ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள குந்தி மகாராணியின் பிரார்த்தனையின்படி, பணம், அழகு, புகழ், கல்வி, உயர்குல பிறப்பு போன்ற தகுதிகளைப் பெற்றவர்கள் உண்மையான மனதுடன் இறைவனை அணுக முடிவதில்லை என்பதை அறிகிறோம். அவர்கள் கர்வத்துடன் இருப்பதே அதற்கு காரணமாகும். கர்வம் கொண்டோரால் எவ்வாறு பகவானை அணுக முடியும்? எனவே, அத்தகு பௌதிகத் தகுதிகள்

ஏதும் இல்லாத, சாதாரண மனிதனால் இயற்கையாகவே இறைவனை அணுக முடியும். எளிமையான மனதுடன் இருப்போர் இறைவனின் கருணைக்கு எளிதில் பாத்திரமாவதை நாம் பல்வேறு நிகழ்ச்சிகளில் கண்டுள்ளோம்.

## திருப்பாணாழ்வாரும் பிராமணரும்

உதாரணமாக, திருப்பாணாழ்வாரின் வாழ்க்கையைப் பார்ப்போம். தாழ்ந்த குலத்தில் தோன்றியதால் அரங்கநாதரின் திருக்கோவிலின் வாசலை மிதிப்பதற்கு அஞ்சிய ஆழ்வார், காவிரிக் கரையிலிருந்தபடி அவரைப் பாடி மகிழ்ந்து வந்தார். ஒருநாள் அரங்கநாதருக்கு தண்ணீர் எடுத்துச் செல்ல வந்த பிராமணர், வழியிலிருந்த ஆழ்வாரை ஓரமாக நகரும்படி கேட்டார். பக்தியில் மூழ்கித் திளைத்திருந்த ஆழ்வார் அவரது குரலைக் கேட்கவில்லை. பலமுறை அழைத்தபோதிலும் கவனிக்காததை கண்டு கோபமுற்ற பிராமணர், ஒரு கல்லை எடுத்து அவர்மீது எறிந்தார். நெற்றியிலிருந்து இரத்தம் சொட்டியது, வெளியுணர்விற்குத் திரும்பிய ஆழ்வார் பிராமணரிடம் மன்னிப்புக் கேட்டு வழிவிட்டார். ஆனால் பிராமணர் நீருடன் அரங்கநாதரைச் சந்திக்கச் சென்றபோது, அரங்கநாதரின் நெற்றியில் இரத்தம் சொட்டியதைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார். பாணரின் மீது கல் எறிந்த தனது அபச்சாரத்தை அறிந்து மிகவும் வருந்தினார். அரங்கனின் ஆணைப்படி ஆழ்வாரிடம் மன்னிப்பு கேட்ட பிராமணர், அவரை தனது முதுகில் சுமந்து கோவிலுக்கு அழைத்து வந்தார்.

## ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவும் பிராமணரும்

ஒருமுறை பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு தென்னிந்திய யாத்திரை மேற்கொண்டபோது, பிராமணர் ஒருவர் பகவத் கீதையை தலைகீழாக பிடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்ததை ஸ்ரீரங்கத்தில் கண்டார். “ஏன் அழுகின்றீர்?” என பகவான் அவரிடம் வினவ, அந்த பக்தர் தன்னுடைய குரு



போதிய கல்வியறிவு இல்லாதபோதிலும் பகவத் கீதையை உண்மையாகப் புரிந்துகொண்டிருந்த பிராமணரை ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு அரவணைத்தல்

தினமும் தன்னை பகவத் கீதை படிக்கச் சொன்னதாகவும், போதிய கல்வியறிவு இல்லாததால்தன்னால்முறையாகப்படிக்க இயலவில்லை என்றும், பேரழகு வாய்ந்த முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர் தனது பக்தனான அர்ஜுனனுக்காக தேரோட்டும் கருணையை நினைத்து அழுவதாகவும் பதில் கூறினார். பகவத் கீதையை உண்மையாகப் புரிந்துகொண்டவன் என்று கூறி, சைதன்ய மஹாபிரபு அவரை அரவணைத்தார்.

## தாழ்ந்த சேவை, உயர்ந்த சேவை உண்டோ?

இந்நிகழ்ச்சிகளிலிருந்து பக்தித் தொண்டாற்றுவதற்கு பௌதிகத் தகுதிகள் எதுவும் தேவையில்லை என்பதை உணரலாம். பலவிதமான தொண்டுகளில், இந்த சேவை உயர்ந்தது, அது தாழ்ந்தது என்று பகவான் கருதுவதில்லை. பக்தர்களின் கழிவறைகளை சுத்தம் செய்வதும் பக்தித் தொண்டு தான். அரச வம்சத்தில் பிறந்த நரோத்தம தாஸ தாகூர் தனது குருவின் கழிவுகளை சுத்தம் செய்து அவரது கருணையைப் பெற்றார். பௌதிக வாழ்க்கையில் மட்டுமே ஏற்றதாழ்வுகள் உண்டு: பணம் படைத்தோர், மெத்தப் படித்தோர், திரைப்படங்களில் நடிப்போர், அரசியல்வாதிகள், பெரிய பதவிகளில் இருப்போர் போன்றவர்கள் உயர்வாகவும், மற்றவர்களை தாழ்வாகவும் கருதுகிறார்கள். ஆனால் பக்தி மார்க்கத்தில் அவ்வாறு அல்ல. தூய்மையான அன்புடன் யார் எந்த சேவையை செய்தாலும், பகவான் அதை ஏற்றுக்கொள்கிறார். தன்னில் திருப்தி கொண்ட அவர் யாருடைய சேவையையும் சார்ந்திருப்பதில்லை; அன்பிற்கு மட்டுமே கட்டுப்பட்டவரான அவர் தனது பக்தனின் அன்புமயமான தொண்டினால் கவரப்படுகிறார்.

## எல்லாம் அவன் கருணை

ஆழ்வார்களின் வரலாற்றிலிருந்து மேலும் ஒரு நிகழ்ச்சியைக் காண்போம். பெரியாழ்வார் தினந்தோறும் மலர்களைப் பறித்து பூமாலை கட்டி பகவானுக்கு அர்ப்பணித்து வந்தார். ஒருமுறை சைவம் உயர்ந்ததா, வைணவம் உயர்ந்ததா என்ற சந்தேகம் பாண்டிய மன்னனுக்கு எழுந்தது. எனவே, வாதிடுவதற்கு பண்டிதர்கள் பலரை அழைத்தான். பெரியாழ்வாரின் கனவில் தோன்றிய பகவான் அவரை அங்குச் செல்லும்படி பணித்தார். தனக்கு வாதிடுமளவிற்கு போதிய அறிவும் தகுதியும் இல்லை என்று ஆழ்வார் கூற, பகவானோ, “மாலை கட்டுவதற்கு மட்டும் தகுதி உண்டோ? யாம் சக்தியளித்தால் மட்டுமே தங்களால் அதைச் செய்ய முடியும். எனவே, வாதிடும் தகுதியையும் யாம் அளிப்போம். தாங்கள் சென்று வாதிடவும்,” என்று கூறி அனுப்பி வைத்தார். எந்த ஒரு தொண்டாக இருந்தாலும் அதை செய்யக்கூடிய திறமை பகவானிடமிருந்தே வருகிறது. நம்மிடம் இருக்கும் திறமை(கள்) பெருமாளின் கருணையால் மட்டுமே கிட்டியுள்ளது என்பதை உணர்ந்து செயல்படுதல் மிகவும் அவசியம்.

## அடைக்கலம் நல்கும் ஸ்ரீ இராமர்

பக்தித் தொண்டு மிகவும் எளிமை யானது. பகவானிடத்தில் தூய்மையான அன்பு மட்டுமே இதற்கு வேண்டும்.

பத்ரம் புஷ்பம் பலம் தோயம் (பகவத் கீதை 9.26). அன்புடனும் பக்தியுடனும் எவனொருவன் தனக்கு ஓர் இலையோ பூவோ பழமோ நீரோ அளித்தால், அதை தான் ஏற்றுக்கொள்வதாக அவர் கூறுகிறார். எனவே, படித்தவன், பாமரன் என அனைவருக்கும் எளிதானது பக்தி.

மேலும், பகவத் கீதையில் (9.29), ''நான் யார் மீதும் பொறாமை கொள்வதில்லை, பாரபட்சமாக நடந்துகொள்வதும் இல்லை. நான் எல்லோரையும் சமமாக பாவிக்கின்றேன். இருப்பினும் உயர்ந்த பக்தியுடன் யார் எனக்கு தொண்டு புரிகிறானோ அவன் என் நண்பன். அவன் என்னில் இருக்கிறான், நானும் அவனுக்கு நண்பனாக இருக்கிறேன்,'' என்று கூறுகிறார். ராமவதாரத்தில் அவர் இதை தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறார். அவரிடம் சரணடைந்த அனைவருக்கும் அவர் அடைக்கலம் கொடுக்கிறார். தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த குகனின் அன்பைப் பாராட்டி அவரைத் தனது சகோதரனாக ஏற்றார், தனக்கு உதவி புரியுமாறு வேண்டி நின்ற சுக்ரீவனை நண்பனாக ஏற்றார். அபயம் என்று வந்த அசுர குலத்தவனாகிய விபீஷணனுக்கும் அடைக்கலம் கொடுத்தார். தனக்கு தொண்டாற்றிய எல்லாரையும் சமமாக பாவித்து அவர்களை நேசித்தார்: மிகப்பெரிய தொண்டாற்றிய ஹனுமானையும் நேசித்தார், தன் சிறிய தேகத்தை கொண்டு பாலம் கட்ட உதவிய அணிலையும் ஆதரித்தார். இராமாயணத்தின் யுத்த காண்டத்தில் (18.33),

ஸக்ருத் யேவ ப்ரபன்னோ யஸ்
தவாஸ்மீதி ச யாசதே
அபயம் ஸர்வதா தஸ்மை
ததாம்யேதத் வ்ரதம் மம

''உண்மையான மனதுடன், 'இறைவா, இன்றிலிருந்து நான் உங்களிடம் சரணடைகிறேன்,' என்று கூறினால், அவர் யாராக இருந்தாலும் நான் அவருக்கு எப்போதும் பாதுகாப்பு அளிக்கின்றேன். இது என்னுடைய விரதம்,'' என்று ஸ்ரீ இராமர் பறைசாற்றுகிறார்.

## இதர உதாரணங்கள்

கிருஷ்ண லீலையிலும் எந்தப் பாகுபாடும் பாராமல், பல இடங்களில் அவர் கருணை வழங்குவதைக் காண்கிறோம். அழகற்ற குப்ஜையின் சேவையை ஏற்றார், வறுமையில் வாடிய குசேலரின் அவலை உண்டு மகிழ்ந்தார். மேலும், துவாரகையில் அரசாண்ட போது மிதிலை நகரை ஆண்ட பகுலாஸ்வ மன்னனையும் எளிமையான ஸ்ருததேவரையும் சமமாக பாவித்தார். இருவரும் அவரை தத்தம் இல்லத்திற்கு அழைக்க, இருவரின் மனமும் வருந்தக்கூடாது என்பதால், இருவரின் இல்லத்திற்கும் ஒரே நேரத்தில் சென்றார்.

அம்பரீஷ மன்னர் மிகப்பெரிய அரசனாக இருந்தபோதிலும், தூய்மை யான மனதுடன் ஒன்பது விதமான பக்தித் தொண்டுகளை செய்து வந்ததையும், துர்வாச முனிவர் தனது கர்வத்தால் அவரை அழிக்க முயன்றபோது, இறைவன் தனது சக்ராயுதத்தினால் முனிவருக்கு பாடம் புகட்டியதையும் ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து நாம் அறிவோம்.



மிகவும் எளியவனான தனது இல்லத்திற்கு ஸ்ரீ கிருஷ்ணர் வருவதைக் கண்ட பேரானந்தத்தில் ஸ்ருததேவர்.

இவை மட்டுமின்றி, இன்றைய கால கட்டத்திலும், பூரியின் அரச வம்சத்தினர் ஸ்ரீ ஜகந்நாதரின் ரதத்தின் முன் வந்து குப்பைகளைக் கூட்டி ரதவீதியைத் தூய்மைப்படுத்துவதைக் காண்கிறோம்.

## இறுதி வரிகள்

ஒருவன் நாட்டை ஆளும் அரசனாக பிறக்கிறான், மற்றொருவன் சாதாரண குடிமகனாக பிறக்கிறான்; ஒருவன் கல்வி கற்று பண்டிதனாகிறான், மற்றொருவன் கல்வி அறிவின்றி வாழ்கிறான்; ஒருவன் செல்வந்தனாக இருக்கிறான், மற்றவன் வறுமையினால் வாடுகிறான். இத்தகைய வேறுபாடுகள் கர்ம வினையினால் ஏற்பட்டவை என்பதை உணர்ந்து, உயர்நிலையில் இருப்பதால் கர்வம் கொள்ளாமலும் தாழ்ந்த நிலையில் இருப்பதால் ஒதுங்கி நிற்காமலும் ஒவ்வொருவரும் பக்தித் தொண்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

கலி யுகத்தில் பகவானை அடைவதற் கான தொண்டுகளில் மிக மிக முக்கிய மானது நாம சங்கீர்த்தனமே.

கலி-காலே நாம-ரூபே க்ருஷ்ண-
அவதார
நாம் ஹைதே ஹய் ஸர்வ-ஜகத்-
நிஸ்தார

''கலியுகத்தில் பகவான் ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தின் வடிவில் அவதரித்துள்ளார். இந்த திருநாமங்களை உச்சரிப்பதால் இறைவனுடன் எளிதில் தொடர்புகொண்டு, விடுதலை பெறுவது நிச்சயம்,'' என்று சைதன்ய சரிதாம்ருதத்தில் (ஆதி லீலை, 17.22) கூறப்பட்டுள்ளது. இந்த நாம சங்கீர்த்தனத்தில் படித்தவன், பாமரன் என இருவரும் ஈடுபடலாமே!

*திருமதி. கீத கோவிந்த தாஸி, வேலூர் நகரத்தைச் சார்ந்தவர்; கனிப்பொறி வல்லுநராக பணியாற்றும் தன் கணவருடன் தற்போது பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகிறார்.*







ஹிரன்யகசிபு என்னும்

# அசுரன்

சக்திவாய்ந்த மன்னனாக விளங்கி வந்தான்.




அதிக பலத்தைப் பெற்று, அனைவரையும் கட்டுப்படுத்தி...

**நித்தியமாக வாழ வேண்டும்**

என்னும் குறிக்கோளுடன் பல்லாயிரக் கணக்கான வருடங்கள் அவன் புரிந்த கடுந் தவத்தினால் அவனை சுற்றியிருந்தவை அனைத்தும் சூடாயின. மிகப்பெரிய புற்று அவனை சுற்றிலும் உருவாகியது.



அந்த வெப்பம் மற்ற கிரகங்களையும் கடுமையாக பாதித்தது.

வெப்பத்தை தாங்க இயலாத தேவர்கள் பிரம்மதேவரின் உதவியை நாடினர். அதன்படி, மந்தார மலைப் பகுதியை அடைந்த பிரம்மா, புற்றிலிருந்த ஹிரன்யகசிபுவின் எலும்புக்கூடு போன்ற உடல் தொடர்ந்து சுவாசித்துக் கொண்டிருந்ததைக் கண்டு வியப்புற்றார்.



தனது கமண்டலத்திலிருந்து பிரம்மதேவர் நீரைத் தெளித்தவுடன், ஹிரன்யகசிபு தனது பழைய உருவத்தை மீண்டும் பெற்றான். அதன் பின்னர் பல்வேறு பிரார்த்தனைகளை அர்ப்பணித்தான்.



"என்ன வரம் வேண்டும்?" என்று பிரம்மதேவர் வினவ,

## "சாகா வரம் வேண்டும்"

"என்னால் அது சாத்தியமல்ல."

"அப்படியெனில், நான் கேட்கப்போகும் வரத்தை எனக்கு அளியுங்கள்," என ஹிரன்யகசிபு உரைக்க,

"எனது சக்திக்குப்பட்ட எதையும் வழங்க நான் தயாராக உள்ளேன்," என்று பிரம்மதேவர் உறுதியளித்தார்.



"நிலத்தில் வாழும் உயிர்களாலோ, கடலில் வாழும் உயிர்களாலோ, எந்தவொரு ஆயுதத்தினாலோ, மனிதர்களாலோ, தேவர்களாலோ நான் கொல்லப்படக் கூடாது. பகலிலோ, இரவிலோ, கட்டிடத்தின் உள்ளேயோ வெளியிலோ, நிலத்திலோ, ஆகாயத்திலோ நான் இறக்கக் கூடாது. மேலும், அனைத்து மாயத் திறன்களும் வேண்டும்."

அவ்வனைத்து வரங்களையும் பிரம்மதேவர் அளித்தார்.



இதற்கு நடுவில், ஹிரன்யகசிபு மந்தார மலையில் இருந்தபோது, தேவர்கள் அவனது நாட்டைத் தாக்கினர்.

கர்ப்பமாக இருந்த ஹிரன்யகசிபுவின் மனைவி கயாதுவை கைப்பற்றிய தேவர்கள், அவளது வயிற்றில் மற்றொரு கொடிய அசுரன் பிறக்கப் போகிறானோ என்ற பயத்தினால், உலகைக் காப்பாற்ற எண்ணி, பிறந்தவுடனே அக்குழந்தையைக் கொல்லத் திட்டமிட்டனர்.



**அப்போது அங்கு வந்த மாமுனிவர் நாரதர்...**






நாரத முனிவரின் ஆசிரமத்திலிருந்த மனைவியை அழைத்துச் சென்றான்.

யாராலும் அவனது கொடூரச் செயல்களைத் தடுக்க இயலவில்லை. தனது வரங்களைத் தவறாகப் பயன்படுத்தி தேவர்களையும் முனிவர் களையும் கொடுமைப்படுத்தினான். மாபெரும் தங்க ஆசனத்தில் அமர்ந்து, அழகிய பெண்களுடன், தங்கக் கோப்பையில் மதுவைப் பருகியபடி வாழ்வைக் கழித்தான்.



அவனது மகன் **பிரகலாதன்** ஐந்து வயதை எட்டியபோது, ஒருநாள்...




"ஆசிரியர்களான ஷண்டனையும் அமர்களையும் உனக்குப் பிடித்துள்ளதா? குருகுலத்தில் நீ கற்றவற்றில் சிறந்தது எது?"

"தந்தையே, பகவான் ***நாராயணரைத்*** திருப்தி செய்வதே அனைத்துப் பாடங்களிலும் சிறந்ததாகும்."



இதை கேட்டு கடுங் கோபம் கொண்ட ஹிரன்யகசிபு, பிரகலாதனை தனது மடியிலிருந்து தரையில் எறிந்தான்.




அரண்மனையின் குறுகிய படிக்கட்டின் வழியாக பிரகலாதன் சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்டான். கூர்மையான பற்களும் செந்நிற முடியும் கொண்ட இராட்சசர்கள், பிரகலாதனை கூர்மையான திரிசூலத்தால் குத்தினர்.



பிரகலாதன் பகவான் நாராயணரின் திருநாமத்தை தொடர்ந்து உச்சரித்தான். கூர்மையான திரிசூலத்தினால் அவனது உடலில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை.



***கொடிய விஷத்தைப்*** பருகச் செய்தனர். பகவான் ஹரியின் திருநாமங்களை உச்சரித்தபடி விஷத்தை அருந்திய பிரகலாதனுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

பிரகலாதனை எவ்விதத்திலும் துன்புறுத்த இயலாததைக் கண்டு அசுரர்கள் வியந்தனர். அவனது சின்னஞ்சிறு கைகளையும் கால்களையும் கயிற்றால் கட்டி, அச்சமூட்டும் பெரிய தந்தம் கொண்ட மாபெரும் யானையைக் கொண்டு பிரகலாதனை மிதிக்க வைத்தனர். அவனோ தீங்கின்றி எழுந்தான்.



கொதிக்கும் எண்ணையில் இட்டனர்; பகவான் நாராயணரின் திருநாமத்தை இடைவிடாது உச்சரித்த பிரகலாதனுக்கு துளியும் காயம் ஏற்படவில்லை.

பிறகு, பிரகலாதனை நாகப்பாம்புகள் நிறைந்த குழியில் தள்ளினர். அவன் பகவானின் பெயரைப் பாடியதால், பாம்புகளும் அவனை ஒன்றும் செய்யவில்லை.




உயர்ந்த மலை உச்சியிலிருந்து தூக்கி எறிந்தனர். பிரகலாதன் திருநாமங்களைத் தொடர்ந்து உச்சரித்துக் கொண்டே இருந்தான். தரையில் விழுந்த பின்பும் துளியும் காயப்படவில்லை. அசுரர்களின் அனைத்து முயற்சிகளும் வீணாகின.
இச்செய்தி ஹிரன்யகசிபுவை அடைந்தது.
“என்ன கூறுகிறீர்கள்? உங்களால் இச்சிறுவனைக் கொல்ல முடியவில்லையா?”
ஹிரன்யகசிபுவின் கோபம் எல்லையைக் கடந்தது.
சினங்கொண்ட ஹிரன்யகசிபுவின் முன்பு பிரகலாதன் கொண்டு வரப்பட்டான். “நீ கூறும் முழுமுதற் கடவுள், சக்தியுடைய உனது பகவான் எங்கே உள்ளான்?”
இங்கே உள்ளானா?
“ஆம் தந்தையே. இந்த தூணில் இருக்கிறார், தரையில் இருக்கிறார், வானத்தில் இருக்கிறார், உமது இதயத்திலும் இருக்கிறார்,” சாந்தமாக பிரகலாதன் பதிலுரைத்தான்.
கோபத்துடன் ஹிரன்யகசிபு தூணை அடிக்க, கடகடவென்ற சத்தத்துடன் தூண் பிளக்கத் தொடங்கியது.
உர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்
செவியைப் பிளக்கும் கர்ஜனையுடன் பாதி சிங்க ரூபத்துடனும் பாதி மனித ரூபத்துடனும் தூணிலிருந்து பாய்ந்து வந்த பெருமாள், ஹிரன்யகசிபுவை தரையில் வீழ்த்தினார்.
அழகிய தோற்றத்துடன், நடுங்கவைக்கும் சிங்க ரூபம் பாதியும் மனித ரூபம் பாதியும் கொண்டு அவதரித்ததால்,
அவர் நரசிம்மர் என்று அழைக்கப்படுகிறார்.
தூணிலிருந்து வெளிவந்த நரசிம்மர் சிறிது நேரத்தில் ஹிரன்யகசிபுவை கொன்றார். வானத்திலோ பூமியிலோ இல்லாமல், நுழைவாயிலில் அமர்ந்து, அவனை தனது மடியில் வைத்து நகங்களால் கிழித்தார். அது பகலும் அல்ல, இரவும் அல்ல—அந்திப்பொழுது. (ஹிரன்யகசிபுவின் வரங்களுக்கு உட்பட்டே அவன் கொல்லப்பட்டான்)
தேவர்கள் வானிலிருந்து பூமாரிப் பொழிந்தனர். பிரார்த்தனைகளை அர்ப்பணித்த பிரகலாதனின் தலையை பிரியத்துடன் தடவிய நரசிம்மர்,
“உன்னிடம் நான் மிகவும் திருப்தியடைந்துள்ளேன். நீ எதை வேண்டுமானாலும் கேட்கலாம்.”
“பிறவிதோறும் தங்களின் சேவையை மட்டுமே நான் வேண்டுகிறேன்.”
“அப்படியே ஆகட்டும். நாட்டை ஆட்சி செய்தாலும், நீ எனது சேவையிலிருந்து துளியும் விலக மாட்டாய்.”
“நன்றி பகவானே. எனது தந்தையையும் அறியாமையிலிருந்து விடுவிக்க வேண்டுகிறேன்.”
“எனதருமை பிரகலாதனே. உன்னைப் போன்ற தூய பக்தனை ஈன்றெடுக்கும் எந்த குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினராயினும், பிறப்பு இறப்பிலிருந்து விடுவிக்கப்படுவர்.”
சிறந்த திறமையுடன் நீண்ட காலம் பிரகலாதன் நல்லாட்சி புரிய, நாட்டு மக்கள் அனைவரும் ஆனந்தமான ஆன்மீக வாழ்வை வாழ்ந்தனர்.
ஸ்ரீ நரசிம்மதேவரின் திருவடிகளை சரணடைவோம்

# எனக்கு என் கண்கள் வேண்டும்!

**மாயாபூர் இஸ்கான் கோவிலில் வீற்றிருக்கும் நரசிம்மர் பல்வேறு பக்தர்களுடன் பற்பல விதங்களில் லீலைகள் புரிந்து வருகிறார். எண்ணற்ற அத்தகு லீலைகளை மாயாபூர் கோவிலில் புத்தகமாக வெளியிட்டுள்ளனர். அதிலிருந்து ஓர் அற்புத லீலையினை பகவத் தரிசனத்தின் வாசகர்களுக்காக இங்கு அர்ப்பணிக்கின்றோம்.**

வழங்கியவர்: திருமதி. ஆத்மரதி தாஸி

1996ம் வருடம் ஒரு மிதமான காலை நேரத்தில், சுமார் 11.00 மணியளவில், அற்புதமான பகவான் நரசிம்மதேவரின் சங்கத்தை வேண்டி, அவரது அன்பிற்குப் பாத்திரமான பிரகலாத மஹாராஜரை துதித்துக் கொண்டிருந்தேன். அவர் பகவானுக்கு மிக அருகில் கைகளைக் கட்டியபடி நின்று கொண்டிருக்கிறார். அவருடைய சிறிய உடல் புத்தம்புது மலர்களாலும் அழகிய ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றது. வசீகரம் மிக்க பிரகலாதருக்கு நமஸ்காரங்களை தெரிவித்தபோது, நான் வேண்டிக் கொண்டேன்: “எனதருமை பிரகலாதரே! பகவான் நரசிம்மதேவரிடம் இருந்து எல்லாவித ஆசீர்வாதங்களையும் பெறுவதில் நீர் திறமைசாலி. உங்களின் அசுரத் தந்தையான ஹிரண்யகசிபு விற்கும் பகவானின் மன்னிப்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுத் தந்தீர்கள். தயவுகூர்ந்து இந்த ஏழை ஆத்மாவின் பக்திப் பாதையில் உள்ள அனைத்து தடைகளையும் அழித்து என்னை ஆசீர்வதிக்கும்படி உங்கள் பகவானிடம் கூறுங்கள், உண்மையான ஆனந்தத்திற்கு வழி காண்பியுங்கள்.”

இவ்வாறு பிரகலாதரிடம் துதித்த பின்னர், நான் நரசிம்மரின் அழகினையும் கருணையையும் தியானித்துக் கொண்டிருந்தேன். அப்போது, மிகவும் இனிமையான குரல் ஒன்றினைக் கேட்டேன்: “எனக்கு என்னுடைய கண்கள் திரும்ப வேண்டும்!” நானோ அக்குரலை உதாசீனப்படுத்திவிட்டு, என் வேண்டுதலில் மனதை நிலைநிறுத்தினேன். ஆனால் அக்குரல் இரண்டாவது முறையும் ஒலித்தது, “எனக்கு என்னுடைய கண்கள் திரும்ப வேண்டும்!” அந்த தெளிவான செய்தியை மீண்டும் அசட்டை செய்ய முயற்சித்தபோது, என் இதயத்தில் எரிவது போன்ற துன்பகரமான உணர்ச்சியை உணர முடிந்தது. நான் வாயடைத்துப் போனேன். என்ன செய்வது என யோசித்த போது, அந்த குரல், “பூஜாரியிடம் செல்!” என்றது. “சரி. எனக்கு அதனால் ஒன்றும் நஷ்டமில்லை; நான் சித்த சுவாதீனம் இல்லா தவள் என்று பூஜாரி கருதினால், அதிகபட்சம் எனது அகங்கார மாவது குறையும்” என்று நினைத்து பூஜாரியை அணுக முடிவு செய்தேன்.

பகவானின் கட்டளையை நிறை வேற்ற எனக்கு சக்தி தருமாறு அவரிடமே வேண்டிக் கொண்டு, கிட்டத்தட்ட மூச்சிரைக்க பூஜாரியின் அறையை நோக்கி முன்னேறி னேன். அங்கு திரு. ஜனநிவாஸ பிரபு ஸ்ரீமத் பாகவதத்தை படித்துக் கொண்டிருந்ததை கவனித்தேன். அந்த அறையின் சூழ்நிலை மிதமிஞ்சிய அமைதியுடன் வேறோர் உலகத்தைப் போன்று இருந்தது. அவர் என்னை கவனிப்பதற்காக சில நிமிடங்கள் காத்திருந்தேன். பிறகு, நடந்த விஷயத்தைக் கூறியபோது, அவர் நரசிம்மதேவரின் மற்றொரு பூஜாரியும் அவரது சகோதரருமான திரு.



மாயாபூரில் எழுந்தருளியுள்ள பகவான் நரசிம்மர்

பங்கஜாங்கிரி பிரபுவைப் பார்க்கும்படி கூறினார். ஆனால் ஏதோ காரணத்தினால், செல்ல வேண்டாம் என்று கருதினேன்.

**மறுநாள்:** நரசிம்மதேவரின் அற்புதமான உருவத்தை நான் மீண்டும் நெருங்கியபோது, என் மனம் சந்தேகத்துடன் வட்டமிட்டது: "அக்குரல் வெறுமனே என் மனதாக இருந்தால் என்ன செய்வது? என்னுடைய கண் பார்வை கடந்த ஆறு வாரமாக மோசமாகவும், அதிக வலியுடனும் இருந்ததால், அதை குணப்படுத்த என் மனதில் வேண்டியிருக்கலாம் அல்லவா?" இவ்வாறு சிந்தனை செய்து கொண்டு, சரியான பதிலுக்காக வேண்டிக் கொண்டேன். அக்குரல் மீண்டும் என்னிடம் பேசியது. இம்முறை ஆணித்தரமான குரலிலும் ஆழ்ந்த சிந்தனையுடனும் பேசியது: "நான் என்னுடைய கண்களைத் திரும்பப் பெறும்போது நீ உன்னுடைய கண்களைப் பெறுவாய்." நரசிம்மரின் உருவம் எப்போதும் போல மென்மையான ஒளியை வெளிப்படுத்தியது. என் இதயம் அமைதியையும் சாந்தத்தையும் உணர்ந்தது. வழக்கத்திற்கு மாறாக, அபரீதமான நம்பிக்கையுடன் என் தலை விண்ணைத் தொடுவது போன்று உணர்ந்தேன்.

மறுநாள் காலை, சரியாக 2.20 மணிக்கு புத்துணர்ச்சியுடன் விழித்தெழுந்தேன். இஃது எனது வழக்கத்திற்கு முற்றிலும் மாறானது; ஒரு மெல்லிய குரல் எழுமாறு தூண்டியது; குளித்து மங்கள ஆரத்தியில் கலந்து கொள்ளத் தூண்டியது. நானும் அவ்வாறே செய்தேன்.

மங்கள ஆரத்தி முடிவடைந்தவுடன், அதே குரல் என்னை நரசிம்மதேவரின் இடத்திலிருந்து பூஜாரியின் அறைக்குச் செல்லுமாறு கூறியது. தர்மசங்கடமான அந்த சூழ்நிலையில் எனது கண்களில் கண்ணீர் பெருகியது; எனது மனதை அவரிடம் வெளிப்படுத்துவதற்கு தயக்கத்துடன் இருந்தேன்.

பூஜாரி பகவானின் அபிஷேகத்திற்கான பொருள்களை தயாரிக்கும் போது, அவரிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தேன். என்னுடைய கதையை மிகவும் சிரத்தையுடன் அவர் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு, எதுவும் கூறாமல், சிரித்துக்கொண்டே, பிரசாத இனிப்பு வகைகளை பகவான் நரசிம்மதேவரின் தட்டிலிருந்து எனக்கு எடுத்துக் கொடுத்தார்.

மறுநாள் காலை, கோவிலிலிருந்து திரும்பிய எனது மகள், "அம்மா, நரசிம்மரின் கண்களை மாற்றி விட்டார்கள். இப்போது அவர் அழகான சிவப்பு நிற கண்களுடன் உள்ளார்," என சப்தமாகக் கூறினாள். அதன் பின்னர், தனது இனிய ஆழமான குரலில் பகவான் எனக்களித்த வாக்குறுதியின்படி, எனது கண் பார்வை ஆச்சரியப்படத்தக்க விதத்தில் மூன்றே நாள்களில் குணமடைந்தது. ஸ்ரீ மாயாபூரில் உள்ள பகவான் நரசிம்மதேவருக்கு எல்லா புகழும் உண்டாகட்டும்!

(குறிப்பு: நரசிம்மதேவருக்கு முதலில் சிகப்பு நிற கண்கள்தான் இருந்தன. ஒருநாள் மாயாபூருக்கு வந்த ஒரு பக்தர், பகவானின் கண்களுக்காக மதிப்புமிக்க இரண்டு மஞ்சள் நிற கற்களை அளித்தார்; பூஜாரிகளும் விருப்பமின்றி விக்ரஹத்தின் இரண்டு கண்களையும் மாற்றினர். ஆனால் பகவானோ தனது பழைய சிவப்பு நிற கண்களையே விரும்புகிறார் என்பதை இந்த லீலையின் மூலம் தெரியப்படுத்தினார்.)

*திருமதி. ஆத்மரதி தாஸி, கிரீஸ் நாட்டைச் சேர்த்தவர். 1980ல் இஸ்கானில் இணைந்த இவர், மாயாபூரில் தொண்டு செய்து வருகிறார்.*

## *பகவத் கீதையைப் படிப்பதைக் காட்டிலும் கால்பந்து விளையாடலாமா?*

(8ஆம் பக்கத்தின் தொடர்ச்சி) கொடுக்க வேண்டும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உயர்ந்த ஆன்மீக அதிகாரியாக, பல்வேறு இதர சாஸ்திரங்களிலும் மிகச்சிறந்த பூர்வீக ஆச்சாரியர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். எனவே, அவரது வார்த்தையை ஏற்றுக்கொள்வதே சாலச் சிறந்தது. அவர் நம்மை கால்பந்து விளையாடச் சொல்லவில்லை; மாறாக, "என்னிடம் சரணடை" என்று கூறுகிறார். அதை விட்டுவிட்டு ஆன்மீகவாதிகள் என்ற போர்வையில் நாத்திகர்களாக வாழ்பவர்களின்பயனற்றவார்த்தைகளை கண்டுகொள்ள வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. இன்று ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லாம், மற்றவர் வேறு கருத்தைச் சொல்லாம், வேறொருவர் இன்னொரு கருத்தைச் சொல்லாம், நாளை மற்றுமொருவர் புதிதாக இன்னொரு கருத்தைச் சொல்லாம். அவை அனைத்தும் அவரவரது அபிப்பிராயங்களாகவே இருக்கும்.

ஆனால் கிருஷ்ணரோ அதிகாரம் பொருந்தியவர். கிருஷ்ணர் கூறிய பகவத் கீதையை முறையான குரு சீடப் பரம்பரையில் பெற்று அதனை உள்ளது உள்ளபடி வழங்கிய ஸ்ரீல பிரபுபாதர் சொல்வதைக் கேட்டல் மிகவும் சிறந்தது. அவர் பகவத் கீதையைக் கொண்டு ஆயிரக்கணக்கான மக்களின் இதயத்தை மாற்றினார், எத்தனையோ மேலைநாட்டினரை பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள தூய பக்தியின் தளத்திற்குக் கொண்டு வந்தார். ஸ்ரீல பிரபுபாதர் அமெரிக்காவிற்குச் சென்று வெறும் உபன்யாஸம் வழங்கி திரும்பி வரவில்லை, அங்கிருந்த மக்களின் வாழ்வில் பகவத் கீதையை நடைமுறைப்படுத்தினார். எனவே, பிரபுபாதரிடமிருந்து கேட்டல் மிகவும் சிறந்தது என்பதும், அதிகாரமற்ற நபர்களிடமிருந்து கேட்டல் அவசியமல்ல என்பதும் முடிவாகும்.

ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களையும் *பகவத் தரிசனம்* பத்திரிகையையும் தொடர்ந்து படிப்பதால், இதுபோன்ற அர்த்தமற்ற கருத்துகளிலிருந்து வாசகர்கள் படிப்படியாக எளிதில் விடுபட முடியும்.

# தாங்கள் பயணம் செய்பவரா?

### கிருஷ்ணருக்குத் தொண்டு செய்ய இதோ ஒரு வழிமுறை

**வழங்கியவர்: கோவிந்த தாஸ்**

ஜட வாழ்வின் துன்பத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவுவதற்காக, ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய முக்கியமான கட்டளைகளுள் ஒன்று, அவரது புத்தகங்களையும் பத்திரிகைகளையும் விநியோகம் செய்வதாகும். அக்கட்டளையை நிறைவேற்ற பல்வேறு பக்தர்கள் பலவிதமான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். வீடுகள், கடைவீதிகள், திருவிழாக்கள், பேருந்து நிலையம், புகைவண்டி நிலையம் போன்ற இடங்களை பல்வேறு யுக்திகளுடன் அணுகி, ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களை அவர்கள் விநியோகம் செய்து வருகின்றனர்.

இக்கட்டுரையில் நமது அன்றாட பயணங்களின்போது புத்தகங்களை விநியோகம் செய்வது குறித்து காணலாம்.

நாம் தினமும் அலுவலகம் செல்கிறோம், வேறு ஊர்களுக்கும் செல்கிறோம், மேலும் பலவிதமான காரணங்களுக்காக பேருந்து, புகைவண்டி போன்ற பொது வாகனங்களை உபயோகிக்கின்றோம். அச்சமயங்களில் கையிலெடுத்துச் செல்வதற்கு எளிமையாக, ஸ்ரீல பிரபுபாதரின் சிறிய புத்தகங்களில் சிலவற்றையும் பகவத் தரிசனம் பத்திரிகையையும் கொண்டு சென்றோமானால், நமது சக பிரயாணிகளிடம் அப்புத்தகங்களைக் காண்பித்து படிக்கச் சொல்லலாம்.

இந்த எண்ணம் திரு. இராம விலாஸ பிரபு அவர்களுடன் அலுவலகம் செல்லும்போது நான் கற்றுக் கொண்டதாகும். நாங்கள் இருவரும் ஒரே அலுவலகத்தில் பணிபுரிகின்றோம். அலுவலகத்திற்குச் செல்லும் போது சில சிறிய புத்தகங்களை அவர் தனது பையில் கொண்டு செல்வார். எனக்கும் சில புத்தகங்களைக் கொடுப்பார். நாங்கள் இருவரும் பேருந்தில் வெவ்வேறு இருக்கைகளில் அமர்ந்து, அருகில் இருப்பவர்களிடம் "படிக்கிறீர்களா? நல்ல புத்தகம்!" என்று கூறுவோம். பெரும்பாலான மக்கள் புத்தகங்களை கையில் வாங்குவர். அதுவே மனிதனின் இயற்கை. மேலும், பகவானின் அழகிய படங்களைப் பார்த்தபின்னர், யாருக்குத்தான் அந்த புத்தகத்தைப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்ற இச்சை வராது?

அவர்கள் புத்தகங்களைக் கையில் வாங்கிய பின்னர், நாங்கள் அவர்களைப் படிக்கச் சொல்வோம். அவர்களும் ஆர்வத்துடன் படிப்பர்; நாங்களோ அவர்களோ இறங்க வேண்டிய நிறுத்தம் வருவதற்குச் சற்று முன்பாக, "இப்புத்தகத்தை வாங்கிக் கொள்வதற்கு விரும்புகிறீர்களா?" என்று அவர்களிடம் கேட்போம். விருப்பமுள்ள சிலர் வாங்கிச் கொள்வர், சிலர் வேண்டாம் என்பர். அதைக் கண்டு நாங்கள் வருந்துவதில்லை. "வேண்டாம்" என்று சொல்பவர்களும் ஸ்ரீல பிரபுபாதரின் நூல்களைசிலநிமிடமாவதுபடித்தார்களே! எண்ணிலடங்காதபிறவிகளாகப்பல்வேறு உடல்களில் சுற்றித் திரிந்த ஜீவன்கள், உன்னத நன்மையை வழங்கக்கூடிய ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பை பெற்றனரே! புத்தகங்களை வாங்கி, முழுமையாகப் படித்து அவர்கள்



தனது வெளியூர் பயணத்தின்போது தான் சந்தித்த கடைக்காரரிடம் ஸ்ரீல பிரபுபாதரின் சிறிய புத்தகம் ஒன்றினைக் கொடுக்கும் பக்தர்

பயன்பெற வேண்டும் என்று நாங்கள் விரும்பும்போதிலும், குறைந்தபட்சம் சில நிமிடங்களாவது இதைப் படித்தனரே என்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவோம். மேலும், அவர்களிடம் திருநாமத்தின் மகிமை, அருகிலிருக்கும் இஸ்கான் கோவில் போன்றவற்றைப் பற்றி எடுத்துரைப்போம்.

இந்த சேவை எனக்கு மிகவும் திருப்தியளிப்பதாக உள்ளது. நாம் பிரபுபாதரிடம் பிரார்த்தனை செய்து, இம்முயற்சியை மேற்கொண்டால், வெற்றி நிச்சயம். தினமும் பிரபுபாதரின் புத்தகங்களை விநியோகம் செய்ய வேண்டும் என்னும் எனது நீண்ட நாள் ஆசையை நடைமுறைக்குக் கொண்டு வந்த இராம விலாஸ பிரபுவிற்கு நன்றி. நாம்தினமும் 3-5 சிறிய புத்தகங்களையும் சில பகவத் தரிசனங்களையும் மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு மேல் கொண்டு சென்றோமெனில், ஓரிரு நாட்கள் மட்டுமே செய்வோம், பின்னர் சோம்பலாக இருந்துவிடுவோம்.

ஸ்ரீதாம் மாயாபூரில் பிரபுபாதரின் சந்நியாச சீடர் ஒருவர் தனது சொற்பொழிவில், "நாம் தினமும் பல்வேறு நபர்களைக் கடந்துச் செல்கிறோம். ஆனால் அவர்கள் நம்மைத் தவிர வேறொரு பக்தரை தங்களது வாழ்வில் சந்திப்பார்களா என்பதை நாம் அறியோம். அதனால் கிருஷ்ண பக்தியை அவர்களுக்குக் கொடுப்பது நமது கடமை," என்று கூறினார். அவரது வார்த்தைகள் எனக்கு மிகவும் பிடித்தமாயின. பிரபுபாதரின் புத்தகங்களை மற்றவர்களுக்குக் கொடுப்பதே கிருஷ்ணரைக் கொடுப்பதற்கான எளிதான வழி என்று நான் கருதுகிறேன்.

இந்த சேவை குறித்து நான் மேலும் சிந்தித்தேன். ஒரு நாளில் நாம் ஒவ்வொருவரும் ஐந்து நபர்களை (அலுவலகம் செல்வது, திரும்பி வருவது உட்பட) சந்திக்கின்றோம் என்று வைத்துக் கொள்வோம். ஒரு மாதத்தில் (26*5=130) 130 புதிய நபர்கள், நம் ஒவ்வொருவரின் மூலமாகவும் கிருஷ்ணரைப் பற்றி அறிவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பத்து பக்தர்கள் இவ்வாறு செய்தால், (10*130=1300) 1,300க்கும் மேற்பட்ட நபர்கள் புதிதாக கிருஷ்ணரைப் பற்றியும் இஸ்கானைப் பற்றியும் அறிய இயலும். இதில் சிலர் புத்தகங்களையும் வாங்கியிருப்பார். தமிழ்நாடு முழுவதும் இதுபோன்று ஆயிரம் பக்தர்கள் செய்தால், 1,30,000க்கும் மேற்பட்ட மக்கள் ஒவ்வொரு மாதமும் பயன் பெறுவர். அலுவலகத்திற்குச் செல்வது மட்டுமல்லாமல், நாம் எப்போதெல்லாம் பொது வாகனங்களை பயன்படுத்துகின்றோமோ, அப்போதெல்லாம் இந்த சேவையை செய்யலாம். அது மட்டுமல்லாமல், இந்த சேவை, அந்தந்த ஊர்களிலுள்ள இஸ்கான் கோவில்களையும் சிறிய பிரச்சார மையங்களையும் வீடுகளில் நடைபெறும் கிருஷ்ண பக்தி நிகழ்ச்சிகளையும் பற்றி விளம்பரப்படுத்துவதற்கு வசதியாக அமையும். மேலும், இந்த சேவையினால், நமது பயனங்கள் சோர்வின்றி விறுவிறுப்பாகத் திகழும்.



கடைத்தெருவில் அன்பர் ஒருவருக்கு பகவத் தரிசனம் பத்திரிகையை விநியோகம் செய்யும் பக்தை

## இந்த சேவையின் சிறப்பம்சம்

பொதுவாக நாம் புத்தக விநியோகம் செய்ய வேண்டுமெனில், அதற்கென்று நேரம், இடம், மக்கள் வருவார்களா என்று பலவற்றை சரிபார்க்க வேண்டி யுள்ளது. ஆனால் இந்த முறையில், பேருந்து என்னும் இடத்தில், பயண நேரம் என்னும் நேரத்தில், இறைவனின் ஏற்பாட்டில், மக்களை எப்போதும் சந்திப்பதற்கு வாய்ப்புள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொள்வது நமது விருப்பம். அண்மையில் இதுபோன்ற ஒரு பயனத்தின்போது, 60-65 வயதான பெரியவர் ஒருவரிடம், **தன்னையறியும் விஞ்ஞானம்** புத்தகத்தைக் காண்பித் தேன். அவர், "ஹரே கிருஷ்ண இயக்கத்தில் என்ன உள்ளது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக நான் இந்த புத்தகத்தை வாங்குகிறேன்," என்று கூறி வாங்கிக் கொண்டார்.

பல்வேறு வார இதழ்களையும் மாத இதழ்களையும் தங்களது பயனத்தின் போது படித்துப் பழக்கப்பட்ட மக்கள், மாத இதழாக வெளிவரும் பகவத் தரிசனத்தினை கண்டிப்பாக படிக்க விரும்புவர். படிப்பதற்கு அவர்கள் தயார், கொடுப்பதற்கு நீங்கள் தயாரா?

*திரு. கோவிந்த தாஸ், B.E., அவர்கள் தனியார் கனிப்பொறி நிறுவனத்தில் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியை பயிற்சி செய்து வருகிறார்.*

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




யோகம் என்றால் இறைவனுடன் அல்லது கிருஷ்ணருடன் இணைத்துக் கொள்ளுதல் என்று பொருள். யோகப் பயிற்சி என்பது கிருஷ்ணரை எப்போதும் நினைப்பதே; அப்பயிற்சி, ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரிப்பதால் எளிதில் அடையப்படுகிறது. ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்ற நாம உச்சாடனத்தை இருபத்தி நான்கு மணி நேரமும் பயிற்சி செய்யலாம். இதற்கு எந்தச் செலவும் இல்லை, இதனால் எந்த இழப்பும் இல்லை, ஆனால் அடையப்படும் இலாபமோ மிகச் சிறந்தது. நீங்கள் ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது? இதற்கு பணம் கொடுக்கத் தேவையில்லை. "தயவுசெய்து ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரியுங்கள்" என்று ஒவ்வொரையும் நாங்கள் வேண்டுகிறோம். இதில் அனைவரும் பங்கு கொள்ளலாம், இரகசியங்கள் ஏதுமில்லை. இதை ஏற்றுக்கொண்டால், ஹரே கிருஷ்ண உச்சாடனத்தினால் அடையும் பலனை நீங்களே காண முடியும்.

**—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

(அக்டோபர் 9, 1975ல் டர்பன் நகரில் வழங்கிய பகவத் கீதை உபன்யாசத்தில் கூறியது)

# மதச்சார்பற்ற அரசு

**பின்வரும் உரையாடல் தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் ஸ்வீடன் நாட்டிற்கான இந்திய தூதுவருக்குமிடையே 1973ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோமில் நடைபெற்றதாகும்.**


**ஸ்ரீல பிரபுபாதர்:** அமெரிக்கா, இந்தியா மற்றும் உலகிலுள்ள பல நாடுகளிலும் மதச்சார்பற்ற அரசு உள்ளது. அரசின் தலைவர்கள் தாங்கள் எந்தவொரு குறிப்பிட்ட மதத்தையும் சார்ந்தவர்கள் அல்ல என்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் மதத்திற்கு விரோதமான நிலையை ஆதரிக்கின்றனர்.

**தூதுவர்:** பிரச்சனை என்னவெனில், பல்வேறு மதத்தைச் சார்ந்த மக்களும் எங்கள் சமுதாயத்தில் வசிப்பதால், அரசில் உள்ள நாங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ளது. மதத்தைப் பற்றி எந்தவிதமான உறுதியான நிலையையும் மேற்கொள்ள முடியாது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. இல்லை. அரசு உறுதியான நிலையை மேற்கொள்ள வேண்டியது அவசியம். அங்கீகாரம் பெற்ற எல்லா மதங்களையும் அரசு பாரபட்சமின்றி நடத்த வேண்டும் என்பது உண்மையே. ஆனால் மக்கள் உண்மையிலேயே மதம் சார்ந்த வாழ்க்கையை நடத்துகிறார்களா என்பதை கவனிக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. மதச்சார்பின்மை என்ற பெயரில், மக்களுக்கு நரகத்திற்கான வழியை அரசு வகுக்கக் கூடாது.

**தூதுவர்:** ஆம். அஃது உண்மைதான்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் முஸ்லிமாக இருந்தால், உண்மையிலேயே முஸ்லிமாகச் செயல்படுகிறீர்களா என்பதை கவனிக்க வேண்டியது அரசின் கடமை. நீங்கள் இந்துவாக இருந்தால், இந்துவாக செயல்படுகிறீர்களா என்பதை கவனிக்க வேண்டியது அரசின் கடமை. நீங்கள் கிருஸ்தவராக இருந்தால், கிருஸ்தவனாகச் செயல்படுகிறீர்களா என்பதைக் காண வேண்டியதும் அரசின் கடமை. மதத்தை அரசு கைவிடக் கூடாது. *தர்மேன ஹீனா: பஷுபி: ஸமானா:*, மக்கள் மதமற்றவர்களாக மாறிவிட்டால், அவர்கள் வெறும் மிருகங்களே. ஆகவே, மக்கள் மிருகங்களாக மாறுவதைத் தடுக்க வேண்டியது அரசின் கடமையாகும். மக்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றலாம், அது ஒரு பொருட்டல்ல. ஆனால் அவர்கள் மதத்தைப் பின்பற்றுபவராக இருத்தல் வேண்டும். மதச்சார்பற்ற அரசு என்றால், "மதத்தைப் பின்பற்றாமல் மக்கள் பூனைகளாகவும் நாய்களாகவும் மாறினால் மாறட்டும்," என்று அலட்சியமாக பொறுப்பற்று இருத்தல் என்று பொருளல்ல. இதனை அரசு கவனிக்காவிடில், அது நல்ல அரசு அல்ல.



**தூதுவர்:** நீங்கள் சொல்வதில் நிறைய விஷயங்கள் இருப்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அரசியல் என்பது நடக்கக்கூடியவற்றைப் பற்றிய கலையாகும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. அரசியல் என்றால் மக்கள் முன்னேற்றமடைகிறார்களா, அதாவது ஆன்மீகத்தில் முன்னேறு கிறார்களா என்பதை கவனிப்பதாகும். அவர்களை இழிவடையச் செய்வதல்ல.

**தூதுவர்:** ஆம். நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அரசின் முதல் கடமை உங்களைப் போன்ற மகத்துவம் வாய்ந்த ஆன்மீகத் தலைவர்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு வசதிகள் செய்வது என்று நான் நினைக்கின்றேன். அதற்கு மேல் அரசு எதைச் செய்தாலும், அது பல்வேறு மதக் குழுவினரின் ஒழுக்கத்தைக் கெடுத்துவிடலாம். பேசுவதற்கான சுதந்திரத்தை வழங்கி, விளையாட்டில் நடுவர் செயல்படுவதுபோல, அரசு செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. அரசு அதற்கு மேலும் செயல்பட வேண்டும். உதாரணமாக, வணிகத் துறையில், தொழில் மற்றும் வியாபார நிறுவனங்கள் ஒழுங்கான முறையில் செயல்படுகின்றனவா என்பதைப் பார்த்து அரசு உரிமம் வழங்குகிறது. அங்கு மேற்பார்வையாளர்களும் சோதனையாளர்களும் உள்ளனர். மற்றொரு உதாரணமாக, மாணவர்களுக்கு சரியான கல்வி கற்றுத் தரப்படுகிறதா என்பதை சோதனையிடுவதற்கு கல்வித் துறையில் ஆய்வாளர்கள் உள்ளனர். அதுபோல, இந்துக்கள் ஒழுங்கான இந்துக்களாகவும், முஸ்லிம்கள் ஒழுங்கான முஸ்லிம்களாகவும், கிருஸ்தவர்கள்

**அரசு மதத்தைப் பற்றி கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது, அவர்கள் நடுநிலையில் இருக்கலாம். ஆனால் மக்கள் தங்களது மதத்தை மற்றவர்களை ஏமாற்றாமல் செவ்வனே பின்பற்றுகிறீர்களா என்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.**

ஒழுங்கான கிருஸ்தவர்களாகவும் உண்மையிலேயே செயல்படுகின்றனரா என்பதை சோதனையிட அரசிடம் நிபுணர்கள் இருக்க வேண்டியது அவசியம். அரசு மதத்தைப் பற்றி கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது. "நீங்கள் எந்த மதத்தைப் பின்பற்றினாலும், அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை," என்று அவர்கள் நடுநிலையில் இருக்கலாம். ஆனால் மக்கள் தங்களது மதத்தை மற்றவர்களை ஏமாற்றாமல் செவ்வனே பின்பற்றுகிறீர்களா என்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

**தூதுவர்:** நீதிநெறிகளை வேண்டுமானால் மக்களிடத்தில் வலியுறுத்த இயலும். ஆனால் அதற்கு மேல் எவ்வாறு சாத்தியமாகும்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் மதக் கோட்பாடுகளை உண்மையாகக் கடைப்பிடிக்காவிடில், உங்களிடம் நீதிநெறிகளை எதிர்பார்க்க முடியாது.

*யஸ்யாஸ்தி பக்திர் பகவத்யகிஞ்சனா*
*ஸர்வைர் குணைஸ் தத்ர ஸமாஸதே ஸுரா:*
*ஹராவ் அபக்தஸ்ய குதோ மஹாத்-குணா*
*மனோரதேனாஸதி தாவதோ பஹி:*

"யாரிடம் கடவுளின்மீது அசைக்க முடியாத இடைவிடாத பக்தி இருக்கிறதோ, அவன் தேவர்களின் குணங்களுடன் திகழ்வான். ஆனால் யாரிடம் அத்தகு பக்தி இல்லையோ, அவன் கடவுளின் வெளிப்புற சக்தியான பௌதிக சக்தியை தன் விருப்பம்போல உபயோகிப்பதற்கு எப்போதும் பல்வேறு திட்டங்களை தீட்டிக் கொண்டிருப்பான், அதனால் அவனிடம் நீதிநெறியுடன் கூடிய குணங்கள் எள்ளளவும் இருக்காது." (ஸ்ரீமத் பாகவதம் 5.18.12)

உங்களுக்கு கடவுளிடம் நம்பிக்கையும் பக்தியும் இருக்கும்வரை, மற்றவை அனைத்தும் சரியே. இறுதியில் பார்த்தால், கடவுள் என்பவர் ஒருவரே. கடவுள் இந்துவோ கிருஸ்தவரோ முஸ்லிமோ அல்ல. கடவுள் ஒருவரே. அதனால் வேத இலக்கியங்கள் நமக்குத் தெரிவிப்பது என்னவெனில்,

*ஸ வை பும்ஸாம் பரோ தர்மோ யதோ பக்திர் அதோக்ஷஜே*
*அஹைதுக்யப்ரதிஹதா யயாத்மா ஸுப்ரஸீததி*

"முழுமுதற் கடவுளுக்கு அன்புடன் பக்தித் தொண்டு செய்வதே மனித சமுதாயத்தின் மிகவுயர்ந்த கடமையாகும். அத்தகு இடைவிடாத உள்நோக்கமற்ற பக்தித் தொண்டு மட்டுமே ஒருவருக்கு முழுமையான திருப்தியை நல்கும்." (பாகவதம் 1.2.6) எனவே, மதத்தை பின்பற்றுபவராக இருத்தல் மிகவும் அவசியம். அவ்வாறு இல்லாவிடில் யாரும் திருப்தியடைய முடியாது. உலகம் முழுவதும் குழப்பமும் அதிருப்தியும் பெருமளவில் நிலவுவது ஏன்? மக்கள் மதங்களைப் பின்பற்றாமல் இருப்பதே காரணம்.

**தூதுவர்:** மாஸ்கோவில் நிறைய மக்கள் மதத்தை வெறுக்கிறார்கள், முற்றிலும் அதற்கு எதிராக உள்ளனர்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் மாஸ்கோவை ஏன் சொல்ல வேண்டும்? எல்லா இடத்திலும் மக்கள் அப்படித்தான் உள்ளனர். மாஸ்கோவில் உள்ளவர்களாவது நேர்மையாக உள்ளனர். "நாங்கள் கடவுளை நம்புவதில்லை," என்று அவர்கள் நேர்மையுடன் ஒப்புக் கொள்கின்றனர்.

**தூதுவர்:** அஃது உண்மையே, முற்றிலும் உண்மையே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆனால் மற்ற இடங்களில் இருப்பவர்களோ, "நான் இந்து," "நான் கிருஸ்துவன்," "நான் முஸ்லிம்," "நான் கடவுளை நம்புகிறேன்" என்று சொல்லிக் கொள்கிறார்கள். இருப்பினும், அவர்களுக்கு மதத்தைப் பற்றி எதுவும் தெரிவதில்லை. கடவுளின் விதிகளை அவர்கள் கடைப்பிடிப்பதும் இல்லை.

**தூதுவர்:** எங்களில் பெரும்பாலோர் அப்படித்தான் இருக்கிறோமோ என நான் அச்சப்படுகிறேன். நீங்கள் சொல்வது உண்மையே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** (சிரித்துக் கொண்டே) மாஸ்கோவில் இருப்பவர்களை கண்ணியமானவர்கள் என்று கூற வேண்டும். அவர்களால் மதத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால், "நாங்கள் மதத்தை நம்பவில்லை," என்று கூறுகின்றனர். ஆனால் மற்ற அயோக்கியர்களோ, "நாங்கள் மதத்தைப் பின்பற்றுகிறோம். கடவுளை நாங்கள் நம்புகிறோம்," என்கின்றனர். இருப்பினும், முற்றிலும் மதத்திற்குப் புறம்பான அதர்மங்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர். பல நேரங்களில் நான் கிருஸ்தவர்களிடம், "உங்களது பைபிள், 'கொல்லாதே' என்று சொல்கிறது. ஆனால் நீங்கள் ஏன் கொலை செய்கிறீர்கள்?" என்று கேட்பேன். அவர்களால் திருப்தியான பதிலைத் தர முடிவதில்லை. கொலை செய்யக் கூடாது என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது இவர்கள் கசாப்புக் கூடங்களை வைத்து பராமரிக்கின்றனர். இஃது என்ன வினோதம்?




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் நான்கு அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **ஐந்தாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# கர்ம யோகம்—கிருஷ்ண உணர்வில் செயல்

## நான்காம் அத்தியாயத்தின் சுருக்கம்

பகவத் கீதையின் அழிவற்ற விஞ்ஞானம் பன்னெடுங் காலத்திற்கு முன்பாகவே சூரிய தேவனுக்கு உரைக்கப்பட்டு குரு சீடப் பரம்பரையின் மூலமாக உணரப்பட்டு வந்தது என்றும், தன்னுடைய நண்பனாகவும் பக்தனாகவும் இருப்பதால் அதே ஞானத்தினை தற்போது அர்ஜுனனுக்கு வழங்குவதாகவும் கிருஷ்ணர் கூறினார். தன்னுடைய வயதை ஒத்தவரான கிருஷ்ணர் எவ்வாறு சூரிய தேவனுக்கு உபதேசித்திருக்க முடியும் என்ற அர்ஜுனனின் கேள்விக்கு, தனது சொந்த விருப்பத்தின்படி தான் பல்வேறு அவதாரங்கள் எடுத்திருப்பதாக அவர் பதிலளித்தார். தர்மம் சீர்குலைந்து அதர்மம் தலைதூக்கும்போது, பக்தர்களைக் காத்து துஷ்டர்களை அழித்து தர்மத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக தான் தோன்றுவதாகவும் தெரிவித்தார். அவ்வாறு அவர் தோன்றும்போது, அவருடைய பிறப்பும் செயல்களும் தெய்வீகமானவை என்பதைப் புரிந்துகொள்பவன் முக்தியடைகிறான்.

கிருஷ்ணரிடம் சரணடைவோர் தங்களது சரணாகதிக்குத் தகுந்த பலனை அடைவர். மக்கள் பெரும்பாலும் இயற்கையின் குணங்களில் இருப்பதால், அக்குணங்களுக்கும் அவர்களது செயல்களுக்கும் ஏற்ப சமுதாயத்தில் நான்கு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. செயல்களைப் பற்றி குழம்பியிருந்த அர்ஜுனனிடம், கர்மம், அகர்மம், விகர்மம் ஆகியவற்றைப் பற்றியும், பலதரப்பட்ட யாகங்களைப் பற்றியும், அத்தகு யாகங்களால் அடையப்படும் தெய்வீக ஞானத்தைப் பற்றியும் கிருஷ்ணர் விளக்கினார். தெய்வீக ஞானத்தைப் போன்று உயர்ந்தது ஏதுமில்லை என்று அதன் பெருமையைக் கூறி, அர்ஜுனனைப் போரிடும்படி கிருஷ்ணர் தூண்ட நான்காம் அத்தியாயம் முடிவுற்றது.

## நான்காம் அத்தியாயத்திற்கும் ஐந்தாம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

ஞானத்தின் தளத்தில் நிலைபெற்றவனுக்கு கடமைகள் ஏதுமில்லை என்று மூன்றாம் அத்தியாயத்திலும், எல்லாவிதமான யாகச் செயல்களும் ஞானத்தில் முற்றுப்பெறுகின்றன என்று நான்காம் அத்தியாயத்திலும் கூறப்பட்டது. இருப்பினும், நான்காம் அத்தியாயத்தின் இறுதியில், ஞானத்தையும் துறவையும் புகழ்ந்த கிருஷ்ணர், எழுந்து போரிடுவாயாக என்று அர்ஜுனனை அறிவுறுத்தினார். பக்தியுடன் செயலாற்றுவதையும் ஞானத்தில் செயலின்மையையும் ஒரே நேரத்தில் இறைவன் வலியுறுத்தியதால் அர்ஜுனன் சற்று

குழம்பிவிட்டான். அதனால், முதலில் செயலைத் துறப்பதையும் பின்னர் பக்தியுடன் செயலாற்றவும் பரிந்துரை செய்துள்ளீர்; இவையிரண்டில் சிறந்த நன்மையைத் தருவது எது என்று அர்ஜுனன் கேள்வி கேட்க, ஐந்தாம் அத்தியாயம் தொடங்குகின்றது.

## கர்ம யோகம் துறவறத்திற்கு சமமானது


அர்ஜுனன் குழம்பிய நிலையில் தொடர வேண்டும் என்பதும், அதன் மூலம் துறவும் செயலும் முரண்பட்டதல்ல என்பதை மேலும் வலியுறுத்த முடியும் என்பதும் கிருஷ்ணரின் திட்டம். செயலைத் துறத்தல், பக்தியுடன் செயலாற்றுதல் ஆகிய இரண்டுமே முக்திக்கு ஏற்றவை; இருப்பினும், பக்தியுடன் செயலாற்றுதல் சிறந்ததாகும். ஏனெனில், அஃது எளிமையானதும் பாதுகாப்பானதும் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதுமாகும். துறவு மனப்பான்மையுடன் தொடர்ந்து செயலாற்றுதல் ஒருவனது ஞானத்தை பலப்படுத்தும். செயல்களின் பலன்களில் விருப்பு வெறுப்பின்றி இருப்பதால், அவன் நிரந்தர சந்நியாசியாக கருதப்படுகிறான்; பௌதிக பந்தங்களை எளிதில் வென்று முக்தியையும் அடைகிறான். கர்ம யோகத்தையும் ஸாங்கிய யோகத்தையும் சமநிலையில் காண்பவன், உள்ளதை உள்ளபடி காண்பவனாவான். அவ்விரண்டு பாதைகளின் குறிக்கோளும் ஒன்றே: அதாவது, ஜீவன் முழுமுதற் கடவுள் அம்சம் என்பதை உணர்வதே. நற்செயல்களில் ஈடுபடாத புலன்கள் தீச்செயல்களை நோக்கிச் செல்வது நிச்சயம் என்பதால், புலன்களைக் கொண்டு பக்தித் தொண்டில் ஈடுபட்டுள்ள சிந்தனையுள்ள மனிதன், தாமதமின்றி பரம்பொருளை அடைய முடியும்.

## நிஷ்காம கர்ம யோகம்

மனதையும் புலன்களையும் கட்டுப்படுத்தி பலன்களை எதிர்பார்க்காமல் செயல்களில் ஈடுபடுபவன் (நிஷ்காம கர்ம யோகத்தில் ஈடுபடுபவன்) அனைவருக்கும் பிரியமானவன்; செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் அவன் பந்தப்படுவதில்லை. பார்த்தல், கேட்டல், நுகர்தல் போன்ற பல்வேறு செயல்களை அவன் செய்தாலும், அவற்றிலிருந்து தான் வேறுபட்டவன் என்பதை அவன் எப்போதும் அறிந்துள்ளான். அவ்வாறு பற்றின்றி தனது கடமைகளைச் செய்து, பலன்களை பரம புருஷ பகவானுக்கு அர்ப்பணிப்பவன், தாமரை இலை எவ்வாறு நீரால் தீண்டப்படாமல் உள்ளதோ, அதுபோல பாவ விளைவுகளால் தீண்டப்படாமல் இருப்பான். அத்தகு நபர்கள், தூய்மையடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், உடல், மனம், புத்தி, புலன்கள் என அனைத்தையும் செயல்படுத்துகின்றனர். அவர்கள் பூரண அமைதியையும், அவ்வாறு செயல்பட மறுப்பவர்கள் பௌதிக வாழ்வின் பந்தத்தையும் அடைகின்றனர்.

## கர்த்தா யார்?

ஒரு செயலைச் செய்பவன் யார் என்பது குறித்து முந்தைய அத்தியாயங்களில் கூறப்பட்ட கருத்துகளை கிருஷ்ணர் இங்கு தொடர்கிறார். மனதால் ஒருவன் எல்லா செயல்களையும் துறந்துவிடும்போது, அவன் எந்தச் செயலையும் செய்வதில்லை, எந்தச் செயலுக்கும் காரணமாவதில்லை, உடல் என்னும் ஒன்பது கதவுகளைக் கொண்ட நகரில் இன்பமாக வசிக்கின்றான். அவன் செயல்களை உண்டாக்குவதில்லை, செயல்படுமாறு மக்களைத் தூண்டுவதும் இல்லை, செயல்களின் பலன்களையும் உண்டாக்குவதில்லை. இவையனைத்தும் ஜட இயற்கையின் குணங்களால் செய்யப்படுகின்றன. இருப்பினும், ஜட இயற்கையின் அதிபதியாகத் திகழும் பரம புருஷர் அச்செயல்களுக்குக் காரணமல்ல.



அடக்கமுள்ள பண்டிதர்கள் உண்மை ஞானத்தின் வாயிலாக, பிராமணன், பசு, யானை, நாய், நாயைத் திண்பவன், என அனைவரையும் சமநோக்கில் காண்கின்றனர் (பகவத் கீதை 5.18)

அறியாமையின் காரணத்தினால் ஜீவன் ஒரு செயலைச் செய்வதற்கு விரும்புகிறான். அந்த விருப்பமே செயல்களுக்கு அடிப்படை என்பதால், ஒரு செயல் நடைபெறும்போது, ஜீவன் அச்செயலுக்கு முக்கிய கர்த்தாவாக அமைகிறான். இருப்பினும், அச்செயல் ஜீவனால் மட்டும் செய்யப்பட இயலாது; ஜட இயற்கையின் உதவியும் பரமாத்மாவின் அனுமதியும் அதற்கு அவசியம் என்பதால், ஜட இயற்கை இரண்டாவது கர்த்தா என்றும், பரமாத்மா மூன்றாவது (இறுதி) கர்த்தா என்றும் அறியப்படுகின்றது.

ஜீவன் இறுதி காரணம் அல்ல என்றபோதிலும், செயல்களின் விளைவு களுக்கு அவனே பொறுப்பாளியாவான். நடுநிலையில் இருந்து அனுமதி கொடுப்பவராகத் திகழும் பரமாத்மா, நல்ல தீய செயல்களுக்குப் பொறுப்பாளி அல்ல. இதைப் புரிந்துகொள்வதே ஞானம், அந்த ஞானத்தின் மூலமாக அறியாமையைக் களைய இயலும்.

## பரமாத்மாவை உணர்ந்தவனின் அறிகுறிகள்

மனம், புத்தி, நம்பிக்கை என எல்லாவற்றையும் பரம்பொருளில் நிலைநிறுத்தி, பூரண ஞானத்தினால் களங்கங்களிலிருந்து விடுபடுபவன் முக்திப் பாதையில் முன்னேறுகிறான். அத்தகையோன், எல்லா உயிர்வாழி களிலும் பரமாத்மா வீற்றுள்ளார் என்பதை தனது ஞானத்தினால் உணர்ந்து, பிராமணன், பசு, யானை, நாய், நாயைத் திண்பவன் என அனைவரையும் சமநோக்கில் காண்கிறான். விரும்பியவற்றை அடைவதால் மகிழ்ச்சியும் விரும்பாத வற்றைப் அடைவதால் துக்கத்தையும் அவன் அனுபவிப்பதில்லை. ஜடப் புலனின்பங்களால் கவரப்படாமல், தன்னுள் எல்லையற்ற சுகத்தை அனுபவிக்கின்றான். புலன்களின் தொடர் பினால் வரும் இன்பம், துன்பத்திற்கு காரணமாக அமையும் என்பதால், ஆரம்பமும் முடிவும் கொண்ட அத்தகு இன்பங்களில் அறிவுடையோன் மகிழ்ச்சி யடைவதில்லை.

## ஐந்தாம் அத்தியாயத்தின் ஐந்து பகுதிகள்

**நான்காம் அத்தியாயத்துடனான தொடர்பு:** 4.41-42, செயல்களின் பலன்களைத் துறந்து யோக கவசம் பூண்டு போரிடுவாயாக.

**(1) கர்ம யோகம் துறவறத்திற்கு சமமானது (5.1-6)**

இரண்டு பாதைகளும் முக்திக்கு ஏற்றவை; இவையிரண்டில் செயலாற்றுதல் சிறந்தது.

**(2) நிஷ்காம கர்ம யோகம் (5.7-12)**

பற்றின்றி கடமைகளைச் செய்து பலன்களை இறைவனுக்கு அர்ப்பணித்தல்

அத்தகையோன் தாமரை இலையிலுள்ள நீரைப் போல விடுபட்டிருப்பான்

**(3) ஆத்மா, பரமாத்மா, இயற்கை—இடையிலான உறவுகள் (5.13-16)**

ஆத்மா செயல்களைச் செய்வதில்லை

ஜட இயற்கையினால் பரமாத்மாவின் அனுமதியில் செய்யப்படுகின்றன

செயல்களின் விளைவுகளுக்கு பரமாத்மா பொறுப்பல்ல

செயல்களுக்கு ஆத்மாவே முதல் கர்த்தா, இயற்கை இரண்டாவது கர்த்தா, பரமாத்மா இறுதி கர்த்தா

**(4) பரமாத்மாவை உணர்ந்தவனின் அறிகுறிகள் (5.17-29)**

எல்லாரையும் சமமாகக் காண்கிறான்

தன்னுள் சுகத்தை அனுபவிக்கின்றான்

ஆரம்பமும் முடிவும் கொண்ட புலனின்பத்தில் நாட்டம் கொள்வதில்லை

பரமாத்ம உணர்வினை அஷ்டாங்க யோகத்தின் மூலமாகவும் அடையலாம்

**(5) அமைதியான வாழ்விற்கு வழி (5.29)**

எல்லா யாகங்களையும் தவங்களையும் அனுபவிப்பவர் கிருஷ்ணரே

எல்லா லோகங்களுக்கும் தேவர்களுக்கும் இறைவன் கிருஷ்ணரே

எல்லா ஜீவன்களுக்கும் உற்ற நண்பன் கிருஷ்ணரே

இவற்றை அறிவதால் அமைதியை அடையலாம்.

புலன்களின் உந்துதல்களைப் பொறுத்தக் கொண்டு, காமத்தையும் கோபத்தையும் கட்டுப்படுத்தக்கூடியவன், இவ்வுலகிலேயே மகிழ்ச்சியாக இருப்பான். அவ்வாறு தனக்குள் பார்வையை செலுத்தி, தனக்குள் இன்பமாக இருப்பவன், பக்குவமான யோகியாவான். அவன் எல்லா பாவத்திலிருந்தும் விடுபட்டு முக்தியடைகிறான்.

## அஷ்டாங்க யோகப் பயிற்சி

நிஷ்காம கர்ம யோகத்தின் மூலமாக பரமாத்மாவை உணர்வதற் கான பாதையை விளக்கிய ஸ்ரீ கிருஷ்ணர், பரமாத்மாவை உணர்வதற்கான மற்றொரு பாதையான அஷ்டாங்க யோகத்தைப் பற்றிய சிறு குறிப்பையும் இந்த அத்தியாயத்தில் வழங்குகிறார். ஆறாம் அத்தியாயத்தில் அஷ்டாங்க யோகம் விரிவாக விளக்கப்படும். அஷ்டாங்க யோகத்தைப் பயிற்சி செய்ய விரும்புபவன், புலன் சார்ந்த விஷயங்களை வெளியில் நிறுத்தி, புருவ மத்தியில் கண்களையும் பார்வையையும் நிறுத்தி, நாசிக்குள் உள் வெளி சுவாசங்களை நிறுத்தி, மனம், புலன், மற்றும் அறிவைக் கட்டுப்படுத்துவதால், ஆசை, பயம், கோபம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு முக்தியடைகிறான்.

### அமைதிக்கான வழி

உலக மக்கள் அனைவரும் எங்கே அமைதி என்று அலைந்து கொண்டுள்ளனர். இங்கே அமைதிக்கான எளிய வழியினை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நமக்கு நல்குகிறார். இவ்வுலகில் கர்ம யோகிகளாலும் ஞான யோகிகளாலும் செய்யப்படும் யாகங்களையும் தவங்களையும் அனுபவிப்பவர் கிருஷ்ணரே; எல்லா லோகங்களையும் தேவர்களையும் ஆள்பவர் கிருஷ்ணரே; எல்லா உயிர்வாழிகளுக்கும் உற்ற நண்பனாக இருப்பவர் கிருஷ்ணரே—இவற்றை எவனொருவன் உண்மையான அறிகின்றானோ, அவன் அமைதியை அடைய முடியும்.

கர்ம யோகம் என்ற பெயரால் பொதுவாக அறியப்படும் இந்த ஐந்தாம் அத்தியாயம், கிருஷ்ண உணர்வின் நடைமுறை விளக்கமாகும். பகவான் கிருஷ்ணரே உயர்ந்த ஆளுநர் என்பதை அறிந்து, கிருஷ்ண உணர்வுடன் செயலாற்றினால், அச்செயல் திவ்ய ஞானத்திலிருந்து வேறுபட்டதல்ல. பரமாத்மாவைப் பற்றிய அந்த திவ்ய ஞானம், முக்திக்கு வழிவகுப்பதாகும்.

ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் வெளியீடு களுக்குத் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.

# ஸ்ரீ நரசிம்மருக்கான பிரார்த்தனை

நமஸ் தே நரஸிம்ஹாய
ப்ரஹ்லாதாஹ்லாத-தாயினே
ஹிரண்யகஷிபோர் வக்ஷ:-
ஷிலா-டங்க-நகாலயே

இதோ ந்ருஸிம்ஹ: பரதோ ந்ருஸிம்ஹோ
யதோ யதோ யாமி ததோ ந்ருஸிம்ஹ:
பஹிர் ந்ருஸிம்ஹோ ஹ்ருதயே ந்ருஸிம்ஹோ
நரஸிம்ஹம் ஆதிம் ஷரணம் ப்ரபத்யே

### நரசிம்ம ஸ்துதி

(தஸாவதார ஸ்தோத்திரத்திலிருந்து)

தவ கர-கமல-வரே நகம் அத்புத-ஷ்ருங்கம்
தலித-ஹிரண்யகஷிபு-தனு-ப்ருங்கம்
கேஷவ த்ருத-நரஹரி-ரூப ஜய ஜகதீஷ ஹரே

### மொழிபெயர்ப்பு

ஹிரண்யகசிபுவின் பாறை போன்ற மார்பினை தன் கூரிய உழி போன்ற நகங்களால் கிழித்தெறிந்தவரும், பிரகலாதனின் ஆனந்தத்திற்கு காரணமானவருமான பகவான் ஸ்ரீ நரசிம்மரை நான் வணங்குகின்றேன்.

பகவான் நரசிம்மர் இங்கும் உள்ளார், அங்கும் உள்ளார், செல்லும் இடமெல்லாம் உள்ளார். அகத்திலும் உள்ளார், புறத்திலும் உள்ளார். ஆதி புருஷரான பகவான் நரசிம்மரிடம் நான் சரணடைகிறேன்.

ஓ கேசவா, பிரபஞ்சத்தின் பிரபுவே, ஓ ஹரியே, பாதி மனிதனும் பாதி சிங்கமுமான உருவத்தை ஏற்ற உமக்கு எல்லாப் புகழும் உரித்தாகுக. தனது விரல் நகங்களுக்கிடையே சிறு பூச்சியை நசுக்குவதுபோல, பூச்சி போன்ற அசுரன் ஹிரண்யகசிபுவின் உடலை உமது அழகிய தாமரைக் கரங்களில் உள்ள அற்புதமான விரல் நகங்களால் கிழித்தெறிந்து விட்டீர்கள்.



இப்பாடலை தினமும் பாடி நரசிம்மரை வழிபடுவோர், பக்தியிலுள்ள தடைகள் நீக்கப்பெற்று முன்னேற்றம் காண்பர்.

**மே 16, நரசிம்ம சதுர்தசி, பகவான் ஸ்ரீ நரசிம்மதேவரின் அவதாரத் திருநாள்**

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த ''பிரபுபாதர் நூற்றந்தாதி''. எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

---

## பகுதி 9 (இறுதிப் பகுதி)

**வாழ்வுதரும் சைத்தன்யர் வண்ணக் கொடிகொண்டு**
**ஆழ்துயர் போக்கி அகிலத்திற்– தாழ்விலா**
**ஐக்கிய நாடுகள் ஆக்குவீ ரார்த்தென்றார்**
**தைக்கும் இருளைத் தகர்த்து. (97)**

நமக்கு நல்வாழ்வு தருகின்ற சைதன்ய மஹாபிரபுவின் ''நாம சங்கீர்த்தனம்'' என்னும் வண்ணக் கொடியைக் கையில் ஏந்தி, இந்த உலகத்து மக்களிடையே தங்கியுள்ள ஆழ்ந்த துயரத்தைப் போக்குவீர். கிருஷ்ண உணர்வை மையமாகக் கொண்டு இந்த உலகை மூடியிருக்கும் அறியாமை என்னும் இருளைத் தகர்த்து, உண்மையான ஐக்கிய நாடுகளை உருவாக்குவீர் என்றார்.

**தகர்க்கும் ஒளிநூற்கட் தன்னரும் ஆசான்**
**விகற்பம் சிறிதின்றி வீற்றுப்– பகர்ந்துறுத்திக்**
**காட்டும் ஒழிவிற் கருணையென் றாரிஃது**
**சூட்டும் மகுடம் சுரர்க்கு. (98)**

தன்னுடைய ஆன்மீக ஆசான் தெய்வத்திரு பக்திசித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி அவர்கள் சிறிதும் ஐயமின்றி வீற்று, ஒளிவிளங்கும், கிருஷ்ண உணர்வுதரும் நூல்களை உருவாக்கி மக்களிடம் கொடுக்க வேண்டும் என்று உறுதியுடன் கூறிக் கருணை காட்டியதால், என்னால் எல்லாம் செய்ய முடிந்தது என்றார். பிரபுபாதரின் இவ்வார்த்தைகள் தேவர்களுக்கு ஒப்பான தன் குருநாதருக்குச் சூட்டும் மகுடம் ஆகும்.

**சுரர்போற்றும் ஆன்ற சுகர்வாக்கில் ஆழ்ந்து**
**பரவாசு தேவனைப் பற்றிப்– பரமார்த்தம்**
**மானிடர்க் கீண்டீந்தார் மாள்மருக்கம் மாற்றிடவன்**
**சூனிய வாதத்தைச் சுட்டு. (99)**

தேவர்களும் போற்றுகின்ற மாட்சிமை பொருந்திய சுகதேவ கோசுவாமி அவர்களின் வாக்கிலே ஆழ்ந்து, பரவாசு தேவனைப் பற்றி, சூனிய வாதத்தை ஒழித்து, உயர்ந்த மெய்ப்பொருளை, மாளவைக்கும் மயக்கம் தீர்ந்திட மனிதர்களுக்குக் கொடுத்தார்.

**சுட்டும் நியமங்கட் சூதுபுலால் வேளாமை**
**நட்டுப் பிறன்மனையை நாடாமை– சொட்டும்கள்**
**உண்ணாமை நான்கொடும் உச்சா டனம்செய்தற்**
**கண்ணான் பெயரைக் கனிந்து. (100)**

பிரபுபாதர் சுட்டிக்காட்டும் நான்கு நியமங்கள்: சூதையும் மாமிசத்தையும் விரும்பாமல் இருத்தல், பிறன் மனையை நாடாமை மற்றும் கள்ளுண்ணாமை. இந்த நான்கு நியமங்களைக் கடைப்பிடித்துக் கிருஷ்ணரின் திருப்பெயரை பிரியத்துடன் உச்சாடனம் செய்ய வேண்டும்.

**கனிவொடு வேண்டினார் கைசேர்த் துழைக்கத்**
**தனித்தனியாய் நில்லாது தங்கிக்– கனிந்துருகிக்**
**கண்ணன்பாற் காதல் வளர்த்தற் கதியென்றார்**
**வண்ணனன்பால் வைகு மிடத்து. (101)**

தன்னுடைய சீடர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைக்க வேண்டும், தனித் தனியாகச் செயல்படக் கூடாது என்று கனிவுடன் வேண்டிக் கொண்டார். கிருஷ்ண உணர்வின் உன்னத நிலையில் இருந்து, கிருஷ்ணரின் மீது காதலை வளர்த்துக் கொள்ள வேண்டும், அதுவே உத்தமகதி என்றார்.

**இடம்பொருட் காலம் இனம்யாவு மாய்ந்து**
**திடமொடு போதித்த தீரர்– உடல்மனம்சொற்**
**பாதார விந்தம் பணிவித்து யாம்செல்வோம்**
**வேதாந்தர் கூட்டும் வழி. (102)**

இடம், பொருள், காலம், இனத்தின் இயல்பு எல்லாவற்றையும் ஆராய்ந்து திடமுடன் போதித்த செயல் வீரர். உடல், மனம்,



வாக்கு எல்லாவற்றையும் பிரபுபாதரின் பாதத் தாமரைகளிலே பணிவித்து, அவர் கூட்டிச் செல்கின்ற வழியில் செல்வோமாக.

**வழியறியேன் வாழ்த்த வகையறியேன் வண்ண**
**மொழியறியேன் ஆயின் முயன்றேன்– விழியிலர்பால்**
**அன்புதிர்க்கும் ஆசானை ஆரதிக்க, நானறிந்த**
**நன்தமிழில் நாவளர்த்து நான். (103)**

விழியின் பார்வை இல்லாதவர்களுக்கு அன்புதிர்த்துக் கருணை காட்டிய ஆன்மீக ஆசானைப் பாடி வாழ்த்த எனக்குத் தெரிந்த தமிழிலே நாவை வளர்த்துக் கொண்டு முயன்றேன். உண்மையில் எனக்கு வழியும், வகையும், அழகான மொழியும் தெரியாது.

**நான்கொடு பத்து நவம்பர்நற் திங்களில்**
**ஆன்உல கெய்தினார் ஆளவந்தார்– தான்இங்கு**
**எண்பத்தோர் ஆண்டு எழுந்தருளி பக்திக்கு**
**அன்புப்பால் ஊட்டுமரும் ஆன். (104)**

நம்மை ஆளவந்த பிரபுபாதர் கி.பி. ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழாம் ஆண்டு, நவம்பர் மாதம் பதினான்காம் நாள் கோலோகத்தை அடைந்தார். எண்பத்தொரு ஆண்டுகள் இந்த மண்ணுலகில் எழுந்தருளிப் பக்திக்கு அன்புப்பால் ஊட்டுகின்ற கிடைத்தற்கரிய பசு பிரபுபாதர் அவர்கள்.

**ஆனினம் காக்கின்ற ஆனந்தன் கார்நிறத்**
**தானினிய வாழ்வு தருமிறைவன்– கோனிடையர்**
**பந்தாவான் பொற்பதங்கட் பற்றிடப் பாலூட்டும்**
**எந்தாய்வே தாந்தரையே எண்ணு. (105)**

பசுக்களையும் கன்றுகளையும் காக்கின்ற ஆனந்தன், கார்நிற கிருஷ்ணன்தான் இனிமையான வாழ்வுதரும் இறைவன். இடையர்களின் தலைவனும் உறவினனுமான அவனுடைய பொற்பாதங்களைப் பற்றுவதற்குப் பக்திப் பாலூட்டும் எந்தாய் வேதாந்தாரையே எப்பொழுதும் நினைப்பாயாக.

**எண்திசையு மின்பமுற என்றும் இயம்புவேன்**
**பண்புடைப் பக்திவே தாந்தரைக்– கண்தரும்**
**அன்பரைச் சொல்ல அரும்பெரும் சொற்காணேன்**
**என்செய்வேன் என்நெஞ்சே ஆடு. (106)**

சிறந்த பண்புகளையுடைய பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்களின் அருமை பெருமைகளை எட்டுத்திசையும் மகிழ்ச்சியடையும் படியாகக் கூறுவேன். அறிவுக் கண்ணைக் கொடுக்கின்ற அன்பரைப் புகழ அரும்பெரும் சொற்கள் கிடைக்கப் பெற்றிலன். என்ன செய்வேன், என்நெஞ்சமே ஆனந்தத்தில் ஆடுவாயாக.

**ஆடுவோம் பாடுவோம் அன்பரை நாடுவோம்**
**நீடுடைப் பக்தி நிறைந்திட– நாடுவோர்**
**இன்புறக் காக்கும் இயல்பினால், ஈண்டொப்பார்**
**அன்புறக் காக்கும் அரவு. (107)**

ஆடுவோம், பிரபுபாதரின் புகழ் பாடுவோம், உயர்ந்த ஆச்சாரிய பக்தியுடன் அன்பரை நாடுவோம். தன்னை நாடுபவர்களை மகிழவைத்துக் காக்கும் இயல்புடைமையால், பிரபுபாதர் எல்லா உயிர்வாழிகளையும் அன்புடன் காக்கும் ஆதிசேஷனுக்கு ஒப்பானவர். (அல்லது, தன்னை நாடியவர்களைக் காக்கின்ற இராமானுஜ ஆச்சாரியருக்கு ஒப்பானவர் என்ற உட்பொருளும் கொள்ளலாம்.)

**அரவு குடையாகும் அன்பனுக்காட் செய்ய**
**இரவுபக லாய்விழைந்த எம்மான்– பிரபுபாதர்**
**சொல்லறிந்து போற்றுவரேற் சோர்வின்றிக் காத்தருள்வான்**
**அல்லவைகட் தேய்க்கும் அறன். (108)**

ஆதிசேஷன் குடையாகின்ற அன்பனான கிருஷ்ணருக்குத் தொண்டு செய்ய, இரவுபகலாக விழைந்த எம்தந்தை, பிரபுபாதர் ஆவார். அவர் எழுதிய நூல்களின் மூலமும் ஆற்றிய பேருரைகளின் மூலமும் அவருடைய சொற்களை அறிந்து, யாரேனும் போற்றிக் கடைப்பிடிப்பாரேயானால், தீயவைகளை ஒழிக்கின்ற தரும தேவனான கிருஷ்ணர் அவரை எந்தத் தாழ்வுமின்றிக் காத்தருள்வார். (முற்றும்)


*தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.*





# பகவத் தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ்ப் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**



## நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரியுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும். ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. சந்தா தொகை: ஒரு வருடம் ரூ. 160; இரண்டு வருடம் ரூ. 300; ஐந்து வருடம் ரூ. 700.

அனுப்ப வேண்டிய முகவரி: பகவத் தரிசனம், ISKCON, 7c, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!**

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### அத்தியாயம் இரண்டு, ஸ்லோகம் 6

*ஸ வை பும்ஸாம் பரோ தர்மோ யதோ பக்திர் அதோக்ஷஜே*
*அஹைதுக்யப்ரதிஹதா யயாத்மா ஸுப்ரஸீததி*

### மொழிபெயர்ப்பு

புலன்களுக்கு அப்பாற்பட்ட புருஷரின் மீதான பக்தித் தொண்டை எதனால் அடைய முடியுமோ, அதுவே மனித சமுதாயத்திற்கான மிகவுயர்ந்த தொழிலாகும் (தர்மமாகும்). ஆத்மாவை முற்றிலும் திருப்திப்படுத்துவதற்கு, இத்தகைய பக்தித் தொண்டு உள்நோக்கம் இல்லாததாகவும் இடையறாததாகவும் இருத்தல் அவசியம்.

### பொருளுரை

நைமிசாரண்ய முனிவர்களின் முதல் கேள்விக்கு ஸ்ரீ சூத கோஸ்வாமி இக்கூற்றில் பதிலளிக்கின்றார். இழிவடைந்த மக்களும் பொது மக்களும் சுலபமாகப் பின்பற்றுவதற்கு ஏற்ப வேத சாஸ்திரங்கள் முழுவதையும் சுருக்கி, அவற்றின் சாராம்சத்தை வழங்குமாறு முனிவர்கள் அவரைக் கேட்டுக் கொண்டனர். வேதங்கள் மனிதர்களுக்கு இருவகையான தர்மங்களை நியமித்துள்ளன. ஒன்று புலனின்பத்தின் பாதை அல்லது *ப்ரவ்ருத்தி-மார்க* என்றும், மற்றது துறவின் பாதை அல்லது *நிவ்ருத்தி-மார்க* என்றும் அழைக்கப்படுகின்றது. புலனின்பத்தின் பாதை தாழ்ந்ததும் உன்னத நோக்கத்திற்காக தியாகம் செய்யும் பாதை உயர்ந்ததுமாகும். பௌதிக வாழ்வு என்பது உயிர்வாழிகளின் உண்மையான வாழ்வின் நோயுற்ற நிலையாகும். உண்மையான வாழ்வென்பது ஆன்மீக வாழ்வு அல்லது *ப்ரஹ்ம-பூத* வாழ்வாகும், அவ்வாழ்க்கை நித்தியமானதும் ஆனந்தமானதும் பூரண அறிவு கொண்டதுமாகும். பௌதிக வாழ்வோ தற்காலிகமானது, அறியாமையும் துன்பங்களும் நிறைந்தது. இவ்வாழ்வில் சிறிதளவும் மகிழ்ச்சி கிடையாது, துன்பங்களைப் போக்கிக் கொள்வதற்கான பயனற்ற முயற்சி மட்டுமே உள்ளது; மேலும், துன்பங்களிலிருந்து தற்காலிகமாக விடுபட்டுள்ள நிலை மகிழ்ச்சி என்று தவறாக அழைக்கப்படுகிறது. எனவே, நிலையற்றதும் துன்பங்கள் நிறைந்ததும் மாயையானதுமான பௌதிக இன்பத்தின் முன்னேற்றப் பாதை, தாழ்வானதாகும். ஆனால் நித்தியமான ஆனந்தமும் பூரண அறிவும் கொண்ட வாழ்வை நோக்கி அழைத்துச் செல்லும் பரம புருஷருக்கான பக்தித் தொண்டு தர்மத்தின் மிகவுயர்ந்த குணம் என்று அழைக்கப்படுகிறது. சில சமயங்களில் தாழ்ந்த குணத்துடன் கலந்துவிடும்பொழுது இஃது அசுத்தமடைகிறது. உதாரணமாக, ஜட இலாபத்திற்காக பக்தித் தொண்டை மேற்கொள்வதென்பது துறவுப் பாதையின் முன்னேற்றத்தில் நிச்சயமாக ஒரு தடையாகும். முடிவான நன்மைக்காக துறவறத்தை அல்லது தியாகத்தை மேற்கொள்வது, நோயுற்ற வாழ்வில் கிடைக்கும் இன்பத்தைவிட, நிச்சயமாக சிறந்த தொழிலாகும். நோயுற்ற வாழ்வின் இன்பங்கள் நோயின் அறிகுறிகளை அதிகரித்து நோயுற்று வாழும் காலத்தையும் அதிகரிக்கின்றன. எனவே, பகவானுக்குச் செய்யும் பக்தித் தொண்டு தூய்மையானதாக இருக்க வேண்டும்; அதாவது, பௌதிக இன்பத்திற்குரிய ஆசை துளியும் இருக்கக் கூடாது. ஆகவே, தேவையற்ற ஆசை, பலன்நோக்குச் செயல், தத்துவக் கற்பனை ஆகியவற்றின் சாரல் துளியும் இன்றி, தர்மத்தின் சிறந்த குணமான பகவானின் பக்தித் தொண்டை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுமட்டுமே இறைவனின் தொண்டில் நிலையான திருப்தியை நோக்கி ஒருவனை அழைத்துச் செல்லும்.

நாம் வேண்டுமென்றே *தர்ம* என்னும் சொல்லை தொழில் என்று குறிப்பிட்டுள்ளோம். ஏனெனில், "வாழ்வைப் பராமரிப்பது" என்பதே *தர்ம* என்னும் சொல்லின் அடிப்படைப் பொருளாகும். ஜீவன் தனது வாழ்வைப் பராமரிப்பது, பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடனான தனது நித்திய உறவுக்கு ஏற்ப தனது செயல்களை வடிவமைத்துக் கொள்வதற்காக இருக்க வேண்டும். உயிர்வாழிகளுக்கு மையமாகவும் எல்லோரையும் கவரக்கூடிய உயிர்வாழியாகவும் கிருஷ்ணர் உள்ளார்; வாழக்கூடிய இதர ரூபங்களுக்கு மத்தியில், அல்லது நித்தியமான ரூபங்களுக்கு மத்தியில், அவர் நித்தியமானவராகத் திகழ்கிறார். ஒவ்வொரு உயிர்வாழிக்கும் ஒரு நித்தியமான உருவம் ஆன்மீக உலகில் உள்ளது, அவர்கள் அனைவருக்கும் கிருஷ்ணர் நித்தியமாகக் கவருகின்றார். கிருஷ்ணரே பூரண முழுமை, மற்றவை அனைத்தும் அவரது அம்சங்களே. இவர்களுக்கு இடையிலான உறவு, தொண்டு செய்யப்படுபவருக்கும் தொண்டனுக்கும் இடையிலான உறவாகும். தெய்வீகமான

இந்த உறவு, பௌதிக வாழ்வில் நமக்குள்ள அனுபவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தொண்டு செய்யப்படுபவருக்கும் தொண்டனுக்கும் இடையிலான இந்த உறவு, நெருக்கமான உறவுகளுக்கு மிகவும் உகந்ததாகும். பக்தித் தொண்டில் முன்னேற்றமடையும்போது இதை உணர முடியும். இறைவனுக்கான அந்த தெய்வீக அன்புத் தொண்டில், பௌதிக வாழ்வின் தற்போதைய பந்தப்பட்ட நிலையிலும்கூட, அனைவரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அது படிப்படியாக உண்மையான வாழ்விற்குரிய வழியைக் காட்டி, ஒருவனை பூரணமாக திருப்திபடுத்துகிறது.

## ஸ்லோகம் 7

வாஸுதேவே பகவதி பக்தி-யோக: ப்ரயோஜித:
ஜனயத்யாஷு வைராக்யம் க்ஞானம் ச யத் அஹைதுகம்

## மொழிபெயர்ப்பு

பரம புருஷ பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணருக்கு பக்தித் தொண்டாற்றுவதால், களங்கமற்ற ஞானமும் உலகத்தின் மீதான பற்றின்மையும் உடனடியாக கிடைக்கின்றன.

## பொருளுரை

பரம புருஷரான ஸ்ரீ கிருஷ்ணருக்கான பக்தித் தொண்டினை பௌதிகத்திலுள்ள உணர்ச்சிவசப்பட்ட செயல்களைப் போன்றதாகக் கருதுபவர்கள், யாகம், தானம், தவம், ஞானம், யோக சித்திகள் மற்றும் பல்வேறு இதர வழிமுறைகளும் தெய்வீக உணர்வை அடைவதற்காக சாஸ்திரங்களில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக விவாதிக்கக்கூடும். அவர்களைப் பொறுத்தவரையில், பக்தி அல்லது இறைவனுக்கான பக்தித் தொண்டு என்பது, உயர்ந்த செயல்களைச் செய்ய முடியாதவர்களுக்காகவே உள்ளது. பக்திப் பாதையானது சூத்திரர்களுக்கும் வைசியர்களுக்கு புத்தியில் தாழ்ந்தவர்களான பெண்களுக்கும் உரியது என்று பொதுவாகக் கூறப்படுகிறது. ஆனால் அஃது உண்மையான கருத்தல்ல. பக்திப் பாதை எல்லா தெய்வீகச் செயல்களிலும் தலைசிறந்ததாக இருப்பதால், ஒரே நேரத்தில் மேன்மையானதாகவும் எளிமையானதாகவும் உள்ளது. பகவானுடன் தொடர்பு கொள்வதில் தீவரமாக உள்ள தூய பக்தர்களுக்கு இது மேன்மையானதாகவும், பக்தி மார்க்கத்தில் அடியெடுத்து வைக்கும் ஆரம்ப சாதகர்களுக்கு இது எளியதாகவும் இருக்கின்றது. புருஷோத்தமரான முழுமுதற் கடவுள்ஸ்ரீகிருஷ்ணரின்தொடர்பைப்பெறுவதென்பதுமிகப்பெரிய விஞ்ஞானமாகும். இது சூத்திரர்கள், வைசியர்கள், பெண்கள், தாழ்ந்தவர்களான சூத்திரர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் என அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் பாதையாகும்; உயர் வகுப்பைச் சார்ந்த தகுதியுள்ள பிராமணர்களைப் பற்றியும் தன்னுணர்வு பெற்ற சிறந்த அரசர்களைப் பற்றியும் கூற என்ன இருக்கிறது. இதர உயர்தரச் செயல்களான யாகம், தானம், தவம் போன்றவை எல்லாம் விஞ்ஞானப்பூர்வமான தூய பக்திப் பாதையினைத் தொடரும் அங்கங்களே.

ஞானமும் துறவும் தெய்வீக உணர்வுப் பாதையின் இரு முக்கிய விஷயங்களாகும். ஆன்மீக வழிமுறையானது பௌதிகம், ஆன்மீகம் என எல்லாவற்றையும் பற்றிய பக்குவ ஞானத்திற்கு இட்டுச் செல்கின்றது. அத்தகு பக்குவ ஞானத்தின் விளைவால், ஒருவன் பௌதிகப் பற்றுதலிலிருந்து விலகி, ஆன்மிகச் செயல்களில் பற்றுதல் கொண்டவனாக ஆகிறான். பௌதிகப் பொருட்களிலிருந்து விலகுதல் என்றால், சில குறைமதியாளர்கள் நினைப்பதுபோல, முழுவதுமாக செயலற்று இருப்பதல்ல. நைஷ்கர்ம என்றால், நன்மை தீமைகளை உண்டாக்கும் செயல்களை செய்யாமல் இருத்தல் என்று பொருள். தவிர்த்தல் என்பது நல்ல விஷயங்களைத் தவிர்ப்பது அல்ல. தேவையற்ற விஷயங்களைத் தவிர்த்தல் என்பது தேவையானவற்றை மறுப்பது அல்ல. அதைப் போலவே, பௌதிக ரூபத்தில் பற்றின்மை என்பது, உண்மையான ரூபத்தை புறக்கணிப்பது அல்ல. பக்திப் பாதை உண்மையான ரூபத்தை உணர்வதற்குரிய வழியாகும். உண்மையான ரூபத்தை உணர்ந்தவுடன், போலி உருவங்கள் தானாக மறைந்துவிடுகின்றன. ஆகவே பக்தி மார்க்கத்தை விருத்தி செய்வதாலும், உண்மையான தொண்டினை உண்மையான ரூபத்திடம் உபயோகிப்பதாலும், ஒருவர் இயற்கையாகவே தாழ்ந்த விஷயங்களிடமிருந்து விலகி உயர்ந்த விஷயங்களிடம் பற்றுதல் கொள்கிறார். அதுபோலவே, ஜீவன்களின் மிகவுயர்ந்த தர்மமாக இருப்பதால், பக்திப் பாதை பௌதிகப் புலனின்பத்திலிருந்து விடுபட்ட நிலைக்கு ஒருவனை அழைத்துச் செல்கிறது. அந்த நிலையே தூய பக்தரின் அறிகுறியாகும். அவர் முட்டாள் அல்லர், தாழ்ந்த சக்திகளில் ஈடுபட்டிருப்பவரும் அல்லர், பௌதிக மதிப்புடையவரும் அல்லர். வறட்டு விவாதத்தினால் இந்நிலையை அடைய முடியாது. இது உண்மையில் சர்வ வல்லமை பொருந்தியவனின் தயவினால் நிகழ்வதாகும். முடிவாக, தூய பக்தனாக இருப்பவரிடம் ஞானம், துறவு போன்ற எல்லா நற்குணங்களும் உள்ளன. ஆனால் ஞானம் அல்லது துறவை மட்டுமே அடையப் பெற்றவர் பக்தி மார்க்கத்தின் கொள்கைகளை சரிவர அறிந்தவர் என்று கூறுவதற்கில்லை. பக்தியே மனிதனின் மிகவுயர்ந்த தர்மமாகும். (தொடரும்)

# சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

# உலகப் பிரச்சனைகளுக்கு கிருஷ்ணரே தீர்வு



மனித சமுதாயம் நாகரிகம் என்ற பெயரில், ஒருவகையான பிரச்சனையை தவிர்ப்பதற்காக மற்றொரு வகையான பிரச்சனையை உண்டாக்குகின்றது. தற்போதைய நாகரிகத்தில், நம்மை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாக அழைத்துச் செல்வதற்காக தானியங்கி வாகனங்கள் அதிகளவில் தயாரிக்கப்படுகின்றன, ஆனால் அதே சமயத்தில் அவை பல்வேறு பிரச்சனைகளை உண்டாக்கியுள்ளன. பல்வேறு புதிய சாலைகளை அமைக்க வேண்டியுள்ளது, அவ்வாறு அமைத்தாலும் வாகனங்களின் வளர்ச்சியினாலும் போக்குவரத்து நெரிசல்களினாலும் அச்சாலைகள் போதுமானவையாக இல்லை. மேலும், காற்று மாசுபடுதல், எரிபொருள் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளும் எழுகின்றன. முடிவு என்னவெனில், நம்முடைய துன்பங்களைக் களைவதற்கோ குறைப்பதற்கோ நம்மால் தயாரிக்கப்படுபவை அனைத்தும் உண்மையில் நமது துன்பங்களுக்கு முடிவு கட்டுவதில்லை. அவையனைத்தும் வெறும் மாயையாகவே உள்ளன. சுமையை தலையிலிருந்துதோளிற்குமாற்றுவதையேநாம்செய்துவருகின்றோம். நம்முடைய பிரச்சனைகளைக் குறைப்பதற்கான உண்மையான வழி, புருஷோத்தமரான முழுமுதற் கடவுளிடம் சரணடைந்து நம்மை அவரது பாதுகாப்பில் விட்டுவிடுவது மட்டுமே. இறைவன் சர்வ சக்தி கொண்டவர் என்பதால், பௌதிக வாழ்வின் துன்பத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அவரால் செய்ய முடியும். (ஸ்ரீமத் பாகவதம் 4.29.33, பொருளுரை)

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(மே 1, 2011 முதல் ஜுன் 15, 2011 வரை)**

### மே

3, செவ்வாய், ஸ்ரீ கதாதர பண்டிதர் தோன்றிய நாள்

12, வியாழன், ஸ்ரீமதி சீதா தேவி (ஸ்ரீ ராமசந்திரரின் துணைவியார்) தோன்றிய நாள், ஸ்ரீ மதுபண்டிதர் மறைவு நாள், ஸ்ரீமதி ஜானவா தேவி தோன்றிய நாள்

14, சனி, மோகினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:53–10:05
ஸ்ரீ ஜெயானந்த பிரபு மறைவு நாள்

16, திங்கள், நரசிம்ம சதுர்தசி, பகவான் நரசிம்மர் தோன்றிய நாள் (மாலை வரை விரதம்)

17, செவ்வாய், ஸ்ரீ மாதவேந்திர பூரி தோன்றிய நாள்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஆச்சாரியர் தோன்றிய நாள்

22, ஞாயிறு, ஸ்ரீ இராமானந்த ராயர் மறைவு நாள்

28, சனி, அபர ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:51–10:05

29, ஞாயிறு, விருந்தாவன தாஸ் தாகூர் தோன்றிய நாள்

### ஜுன்

11, சனி - ஸ்ரீ பலதேவ வித்யாபூஷணர் மறைவு நாள்

12, ஞாயிறு - பாண்டவ நிர்ஜல ஏகாதசி விரதம்
(மற்ற ஏகாதசிகளைப் பின்பற்றும்போது ஏதேனும் தவறு நேர்ந்திருந்தால் இந்த ஏகாதசியை தண்ணீர்கூட அருந்தாமல் பின்பற்றுதல் உகந்தது)
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:52–08:20

14, செவ்வாய், பானிஹாட்டி சிடா ததி உற்சவம்

15, புதன், பூரி ஸ்ரீ ஜகந்நாதர் ஸ்நான யாத்திரை
ஸ்ரீ முகுந்த தத்தர் மறைவு நாள்
ஸ்ரீதர பண்டிதர் மறைவு நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.




இதுவரை "ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்" என்று அறியப்பட்ட
இப்பத்திரிகை, இம்மாதம் முதல் "பகவத் தரிசனம்"
என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
வேறு மாற்றங்கள் ஏதுமில்லை.




தங்கமயில்
தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்
அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

**இராஜபாளையம்**
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

**திண்டுக்கல்**
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

**காரைக்குடி**
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

**தேனி**
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

**இராமநாதபுரம்**
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

**சிவகாசி**
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

**தூத்துக்குடி**
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553